Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள்-14

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-24 | 09-11-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -265

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10704) T.P: 024-222 4247


## அன்ரன் பாலசிங்கம் இன்று கிளி.வந்தடைவார்



தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவ ஆசிரியருமானஅன்ரன் பாலசிங்கம் அவர்கள் இன்று கிளிநொச்சியை வந்தடையவுள்ளார்.

லண்டனில் தங்கியிருக்கும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து உலங்கு வானூர்த்தி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ வாகனம் மீதான தாக்குதலுக்கும் எமக்கும் எந்தவித தொடர்புமில்லை

### -மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறை தெரிவிப்பு

வாழைச்சேனைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இராணுவ வாகனம் மீதான தாக்குதல் சம்பவதிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே எந்தவித சம்பந்தமோ, தொடர்போ இல்லையென மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில், காலை 11.00 மணியளவில் வாழைச்சேனைப் பேத்தாளை இறங்குதுறைக்கு அருகில் வைத்துக் கல்குடா இராணுவ முகாம் தளபதியின் வாகனத்திற்கு கைக்குண்டு வீசப்பட்டு பின் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இச்சம்பவத்திற்கும் எந்தவித சம்பந்தமோ,

(14 ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய – சிறிலங்கா பாதுகாப்பு உடன்பாட்டின் மூலம்

# வெளிநாட்டுக் கொள்கையில் திருப்பம் ஏற்படுத்த

# இந். பிரதமர் மன்மோகன்சிங் விரும்பவில்லை!

### டில்லி பல்கலைக்கழகப் பேராசிரியர் சகாதேவன்

**இந்தியப் புதிய பிரதமர் மன்மோகன் சிங் வெளிநாட்டுக்கொள்கையைப் பொறுத்தவரையிலும் சரி, உள்நாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையிலும் சரி இவருக்கு ஒருபுதிய அனுபவம்.அத்துடன் வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தப்படவேண்டுமென அவர் எண்ணவில்லை.**

இவ்வாறு இலங்கை-இந்தியா பாதுகாப்பு உள்நாடு கைச்சாத்தாகாமைக்கு ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் சகாதேவன் காரணம் தெரிவிக்கின்றார். தொடர்ந்து அவர் கருத்துத்தெரிவிக்கையில்; இரண்டு அரசாங்க அலுவலர்களிடையே பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு முக்கியமான உடன்படிக்கையை அவர்கள் தயார் செய்து வைத்திருக்கிறார்களென தெரிகி றது. அது ஏன் கையெழுத்திடவில்லையென்றால் ஒரு முக்கிய அரசியல் காரணம் இலங்கையைப் பொறுத்தவரையில் இந்திய அரசின் சில கொள்கைகள் தமிழ் நாட்டிலுள்ள சில அரசியல் கட்சிகள் அரசின் அங்கம் வகிக்கும் கட்சிகளாக இருப்பதால் பிரதமர் இதனை இப்போது விரும்ப வில்லை. ஏனெனில் சில தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் இந்திய சிறிலங்காவிற்குமிடையே பாதுகாப்பு ஒப்பந்தம் வருவதை வரவேற்கத்தயாராக இல்லை. அதற்கு அவர்கள் எதிர்ப்புக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். இதன்போது

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இந். மீனவர் அத்துமீறல் தொடரின் மறியல் போர் நடத்துவோம்!

### மன்னார் மாவட்ட மீனவர் எச்சரிக்கை

இந்திய மீனவர்கள் தாயகக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதைக் கண்டித்துப்பேசாலை மீனவர்கள் மேற்கொண்டு வந்த வீதி மறியல் போராட்டத்தை நேற்றுக் கைவிட்டுள்ளனர். இது தொடர்பான சந்திப்பு மன்னார் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் இடம்பெற்றது. இதில் மீனவ பிரதிநிதிகளிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கல நாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வடபிராந்தியக்கடற்படைகளின் பிரதிக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரத்னகீர்த்தி வழங்கிய உறுதிமொழி யைத் தொடர்ந்து தமது போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இதன்போது இரண்டு வாரத்தினுள் இந்திய மீனவர்களின் அத்து மீறலைத்தடுக்க உரிய நட வடிக்கை எடுப்போமென வடபிராந்தியக் கடற்படைகளின் கட்டளைத் தளபதி உறுதியளித்துள்ளார்.

இந்தியாவும் இலங்கையும் உறவுகள் இருக்கின்றபோதும் இலங்கையின் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் அத்துமீறி பிரவேசித்தமையை தாம் ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை யென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரண்டு வாரத்திற் குப் பின்னர் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் தாம் வடபிராந்திய மீனவர்கள் அனை

(14 ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சிக் கடற்பரப்பில்

## தொழிலுக்குச் சென்ற மீனவரைக் காணவில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியில் உள்ள வல்வெட்டித்துறை கடற்பரப்பில் தொழிலுக்கு சென்ற கடற்றொழிலாளர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.நேற்று முன்தினம் மாலை வேளை கடற்றொழிலுக்கு சென்ற வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்த கருணாகரன் (வயது-42) என்பவரே காணாமற் போயுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் தற்பொழுது நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாகவே இவர் திசை மாறி சென்றிருப்பதாகவும் இவரை மீட்கும் பணி துரிதமாக இடம் பெற்று வருவதாகவும் வடமராட்சி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை இடமாற்றம்

புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையானது தொடர்ச்சியான மழை காரணமாக இன்று முதல் மறுஅறிவித்தல் வரும் வரை பி.ப.1.30 மணிக்கு புதுக் குடியிருப்பு மகாவித்தியாலயத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி வேட்பாளராக ரணிலை பிரேரிக்க ஐ.தே.க.தீர்மானம்

எதிர்வரும் டிசம்பர் மாதம் ஐ.தே.கட்சியின் 50 ஆவது சம்மேளன கூட்டத்தில் சனாதிபதி வேட்பாளராக ரணிலின் பெயரை பிரேரிப்பதற் ஐ.தே.கட்சியின் நடவடிக்கைக் குழு தீர்மானம் எடுத்துள்ளது.

நேற்று இக்கூட்டம் இடம் பெற்றவேளை கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரிய இதற்கான முன் ஏற்பாட்டை செய்தார் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. எதிர்காலத்தில் அரசாங்க அமைச்சு உரிய நிலைப்பாடுகள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## எரிக்சூல் ஹெய்ம் வருகை

நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் நேற்று நள்ளிரவு கொழும்புக்கு வருகை தரவிருந்தார்.இவரின் விமானம் இரவு 8.30மணிக்கு கட்டுநாயக்க

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்களின் பெற்றோர் கவனத்திற்கு!

எமது தேசத்தின் விடிவிற்காகக் களமாடி வீரகாவியமாகி கல்லறைகளிலும், நடுகற்களிலும் உறங்கிக்கொண்டிருக்கும் எங்களின் பிள்ளைகள் எம்மினிய மாவீரர்களை நினைவுகூரும் நன்நாளாகிய 2004 ஆம் ஆண்டின் மாவீரர்நாள் எம்மை அண்மித்துவிட்டது.

கார்த்திகை 27ஆம் நாள் எமது தேசத்தின் துயிலும் இல்லங்களில் மாவீரர்களின் நினைவுச்சுடரேற்றுவதற்குச் செல்லும் பெற்றோர்களுக்கான ஏற்பாடுகள் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

எனவே எம் பாசத்திற்குரிய மாவீரர்களின் பெற்றோர்களே தங்கள் மாவீரச் செல்வங்களின் கல்லறைகள், நினைவுக் கற்கள் பற்றிய விபரங்களை எதிர்வரும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### -பத்திரிகை விற்ற சிறுவன் மீது சூடு-

## யாழ். நீதிமன்ற வழக்கு வவு.நீதிமன்றிற்கு மாற்றம்

யாழ் நகரப்பகுதியில் ஈழநாதம் பத்திரிகை விற்ற சிறுவன்மீது இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையொன்றினை யாழ். நீதிமன்றி லிருந்து வவுனியா நீதி மன்றிற்கு மாற்றஞ்செய்வதற்கான உத்தரவை மேன்முறையீட்டு நீதி மன்று பிறப்பித்துள்ளது.

மத்திய பேருந்து நிலையப்பகுதியினில் "ஈழநாதம்" பத்திரிகை விற்பனை செய்து கொண்டிருந்த இந்த சிறுவன் மீது

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### முக்கிய அறிவித்தல்

மாவீரர் தினத்தை முன்னிட்டு இன்றிலிருந்து இளம்பிறை தையலகத்தினர் றவுசருக்கு 175 ரூபா, சேட்75ரூபா தையல் கூலியாக பெற்றுத்தைத்துக் கொடுக்கவுள்ளனர் என்பதனை தெரியப்படுத்தியுள்ளனர். உரிமையாளர், சதீஸ். (5257)

### தவறிவிட்டது

கிளிநொச்சி கனகபுரம் 2ஆம் பண்ணை இலக்கம் 13இல் வசித்து வரும் பொன்னையா சின்னராசா ஆகிய எனது வளர்ப்பு நாய் (பெமேரியன்) மண்ணிறம் வியாழக்கிழமையிலிருந்து காணாமல் போயுள்ளது. அதனைக் கண்டவர்கள் மேற்படி விலாசத்துடன் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். தகவல்:பொ.சின்னராசா. (5256)


# கிளி.விநாயகபுரம் கிராமத்தில் நிகோட் திட்ட அறிமுகவிழா



ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியீட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நிகோட் கருத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் சமூக அபிவிருத்தித்திட்டத்தின் திட்ட அறிமுகவிழா நேற்று நண்பகல் 12.00 மணியளவில் விநாயகபுரம் கிராமத்தில் நடைபெற்றது.

தமிழர் புனர் வாழ்வுக் கழக ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கினை கிளிநொச்சி மாவட்ட நிகோட்திட்டப் பிரதிப்பணிப்பாளர் க. பார்த்தீபன், கரைச்சி பிரதேச செயலாளர் செல்வி க.சுலோஜினி, தமிழீழ ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் கந்தம்மான், கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய செயலாளர் வே. சுப்பிரமணியம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.தொடர்ந்து தேசியக் கொடியினை தமிழீழ ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். மௌன வணக்கத்தைத்தொடர்ந்து திட்ட விளக்கப்பலகையினை நிகோட் திட்டப்பிரதிப்பணிப்பாளர் திரைநீக்கம் செய்து வைத்தார். அடுத்து இடம்பெற்ற கிராம அபிவிருத்திச் செயலக கட்டடத் தொகுதிக்குரிய அடிக்கல்லினை கரைச்சிப் பிரதேச செயலாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்டப்பணிப்பாளர் வ. ரீகன் நிகோட் திட்டப் பொறியியலாளர் க.குகதாசன் ஆகியோர் நாட்டிவைத்தனர்.

தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் தலைமை உரையினை தமிழர்புனர்வாழ்வுக்கழக நிகோட் பகுதி திட்டப் பகுதி இணைப்பாளர் கரவிககாந் நிகழ்த்தினார்.தொடர்ந்து சிறப்புரையினை நிகோட் திட்டப் பிரதிப்பணிப்பாளர் விநாயகபுரம் கிராமசேவையாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்டப்பணிப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர். முதன்மை விருந்தினர் உரையினை கரைச்சிப்பிரதேச செயலாளரும், கௌரவ விருந்தினர் உரையினைத் தமிழீழ ஊரக வளர்ச்சிப்பொறுப்பாளரும் நிகழ்த்தினர். திட்ட அறிமுக நிகழ்வில் உரையாற்றிய திட்ட இணைப்பாளர் விநாயகபுரம் கிராமத்தில் பின்வரும் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இத்திட்டங்கள் 18மாத காலத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் எனத்தெரிவித்தார்.

01.கிராம அமைப்புக்களை வலுப்படுத்தல் 66,120.00, 02.தொழிற்பயிற்சி 110,000.00, 03.வருமான அதிகரிப்புத் திட்டம் சிறுவியாபாரம் 225,000.00, விவசாய நடவடிக்கை 228,000.00, கால்நடைவளர்ப்பு 60,000.00, மீன்பிடி 50,000.00, சிறு தொழில் முயற்சி 58,000.00, தொழிற்பயிற்சி நடவடிக்கை 59,050.00, 04.கிராமிய வீதிகள் புனரமைப்பு மதகுகள் அமைப்பு1,595,000.00, 05.கிராம அபிவிருத்திச் செயலகக் கட்டடத்தொகுதி 1,535,529.50, குடிநீர் வசதியை மேம்படுத்தல் 130,000.00, 07. தனிமலகூடம் அமைத்தல் 660,000.00 தொடர்ந்து இடம்பெற்ற பயனாளிகளுக்குரிய கடன் வழங்கல் நிகழ்வில் முதலாவது பயனாளிக்குரிய கடனுதவியை நிகோட்திட்டப் பிரதிப் பணிப்பாளர் வழங்கி ஆரம்பித்து வைத்தார். இறுதியாக சமூக பொருளாதார அபிவிருத்திச்சங்கத் தலைவர் கை.அலெக்சாண்டரின் நன்றியுரையுடன் வைபவம் இனிதே நிறைவேறியது.

- கிளி- மாவட்டத்தில் -

## சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்தோர் கவனத்திற்கு

(அலுவலக செய்தியாளர்)

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் அன்னவரும் கிளி.மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் 13ஆம் 14ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சாரதிய அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டை, அனுமதி அட்டைகளுடன் பரீட்சைக்கு சமுகமளிக்கும் வண்ணம் கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)


## வவுனியா மாவட்ட கமக்கார அமைப்பின் சங்கம நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா மாவட்ட கமக்கார அமைப்பின் சங்கம நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி வவுனியா மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கம நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சி.தர்மேந்திரா, த.பொ.மே.நிறுவ வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் இ.மாறன் ஆகியோர் கலந்து சிறப்புரை வழங்கினர்.

மேற்படி நிகழ்வில் வவுனியா மாவட்டத்திற்குட்பட்ட கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர்களும் பெருமளவு விவசாயிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)



துணுக்காய் வலயக் கல்வித் திணைக்களத்திற்கு உட்பட்ட அனிஞ்சியன்குளம் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தின் தரம் 5 இற்கான வகுப்பறையும் ,மாணவர்களின் துவிச்சக்கர வண்டிக்கான பாதுகாப்பிடமும் அண்மையில் பெய்த கனமழையினாலும் கடும் காற்றினாலும் கடந்த 5 ஆம் திகதி காலை 8.00 மணியளவில் பொறிந்து விழுந்துள்ளன.இதனால் வகுப்பறையில் தளபாடங்கள், துவிச்சக்கர வண்டிகள் என்பன சேதத்திற்குள்ளானது. இருப்பினும் ஆசிரியர், மாணவர்கள் காயம் எதுவும் இன்றித் தப்பித்தனர். (24)

படம் தகவல்:- அன்ரனி

## வடகிழக்கு மாகாண ஆளுநரின் வவுனியா விஜயம் ரத்து

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் வவுனியா விஜயம் காரணமெதுவுமின்றி திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன இன்று வவுனியாவிற்கு விஜயம் செய்து வவுனியா அரச செயலகத்தில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாட இருந்தார்.எனினும் காரணம் எதுவும் குறிப்பிடப்படாது இவரது விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், இவரது விஜயம் குறித்த திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் வவுனியா அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (10)

-அக்கராயன் பிரதேசத்தில்

## மாவீரர் நாள் நிகழ்வு ஒருங்கமைப்பு கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

மாவீரர் நாள் நிகழ்வு ஒருங்கிணைப்பு கலந்துரையாடல் ஆனைவிழுந்தான் , வன்னேரிப் பகுதிகளிலும், ஸ்கந்தபுரம் பகுதியிலும் கடந்த 4 ஆம் திகதி அக்கராயன் பகுதியிலும் நடைபெற்றுள்ளது.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பலர் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சபாரட்ணம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்துரைகளை அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் வழங்கினார்.

இதேவேளை ஸ்கந்தபுரம் அக்கராயன் பிரதேசங்களில் மாவீரா நாள் நிகழ்வுகளை சிறப்பாக அனுஷிடிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றது. (15)

## கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரம்- மணியங்குளம் பகுதியில் ஜீவனோபாய கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது. மணியங்குளம் கிராம முன்னேற்றச் சங்க பொருளாளர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்துரைகளை ஸ்கந்தபுரம் கிராம அலுவலர், கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர். அக்கராயன் பிரதேசப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினர். (15)

## உந்துருளி ஓட்டுனர் விபத்தில் காயம் உந்துருளிக்கும் பலத்த சேதம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி டிப்போ வீதியில் உதயநகர் பகுதியில் ஏற்பட்ட வீதி விபத்து ஒன்றில் உந்துருளி ஓட்டுநர் காயமடைந்ததுடன், உந்துருளியின் முன்பகுதி முற்றாக சேதமாகியுள்ளது.

நேற்றுக் காலை11.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது கனகபுரத்திலிருந்து சென்று கொண்டிருந்த உந்துருளி அதற்கு முன் சென்று கொண்டிருந்த "கன்டர்" வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டவேளை எதிரே வந்த உழவு இயந்திரத்துடன் மோதிக்கொண்டது. இதில் உந்துருளியின் முன் பக்கம் முற்றாக சேதமாகியுள்ளதுடன் ஓட்டுநரான பேரின்பகரன் (வயது -21) என்பவர் சிறிய காயங்களுக்கு உள்ளாகி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இவ்விபத்தின் மேலதிக விசாரணைகளை காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப்பரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு,ச)


## நன்றி கூறுகின்றோம்

### தொம்மைப்பிள்ளை அன்ரன் ஜெராட்

செல்வபுரம் முல்லைத்தீவைச் சேர்ந்த தொம்மைப்பிள்ளை அன்ரன் ஜெராட் அவர்களின் ஈமக்கிரிகைகளிலும் எமது இல்லத்துக்கு வருகைதந்து ஆறாத்துயரில் பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம். அத்துடன் 10.11.2004 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

தகவல்:-
பலாலி நண்பர்கள்.

(சி-10700)

மாகாண சுகாதார சேவைகள்
பிரதிப்பணிப்பாளர் பணிமனை - கிளிநொச்சி

பால் தவிர்ந்த சமைத்த உணவு/உலர் உணவு/அழுக்குத்துணிகள் கழுவுதல் - 2005

### கேள்வி திறத்தல் - பிற்போடல்

21.10.2004 ஆம் திகதியன்று விளம்பரம் செய்யப்பட்ட மேற்குறிப்பிட்ட கேள்விகள் 2004.11.10. ஆம் திகதி திறக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருவதுடன், இக் கேள்விகள் 2004.11.15ஆம் திகதியன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி,
மாகாண சுகாதார சேவைகள்
பிரதிப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி-10606)

# யசீர் அரபாத்தை உயிருடன் புதைக்க சதி
# அரபாத்தின் துணைவியார் திடுக்கிடும் அறிவிப்பு

**பரிஸ் நகரிலுள்ள அதி நவீன இராணுவ வைத்திசாலையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் சிகிச்சை பெற்று வரும் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்திற்கு இரத்தச் சோகை நோய் ஏற்படவில்லையென்றும், கல்லீரல் சம்பந்தமான நோயே ஏற்பட்டுள்ளதென்று வைத்திய நிபுணர்கள் நேற்றுக்காலை அறிவித்துள்ளனர்.**

இதற்கிடையில் அரபாத்தைச் சந்திக்கவென பலஸ்தீன விடுதலை இயக்கச் செயலாளர் நாயகம் நகமூட் அஸாத், பிரதமமந்திரி அகமத்கோரி, வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் மேற்குக் கரையோரப் பகுதியிலிருந்து பரிசிற்கு செல்ல இருந்தனர்.

சனாதிபதி அராபத் சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கும் அவரது மனைவி பலஸ்தீன அதிகாரிகள் பரிசிற்கு வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

இவர்கள் அனைவரும் பதவி ஆசை பிடித்தவர்களென்றும், 75 வயது நிரம்பிய தனது கணவரை உயிரோடு நல்லடக்கம் செய்யத் திட்டமிட்டுள்ளனரென்றும் அவருக்கெதிரான சதித்திட்டம் பற்றி பலஸ்தீன மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அவா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய இணையத்தளம் விடுத்த செய்தியில், பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்திற்கு உயிராபத்து ஏற்படுமானால் பலஸ்தீன பிராந்தியத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பற்றி இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆலோசனை மேற்கொண்டுள்ளனர் என்றும் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

பிரஞ் வெளிவிவகார அமைச்சர் தகவல் தருகையில் பலஸ்தீனத் தலைவர் அரபாத்தின் உடல் நிலை மிகவும் மோசமாக இருந்த போதிலும் அவருடன் தாம் உரையாடிய போது ஸ்திரமான நிலையில் இருந்தாரென்றும் தெரிவித்துள்ளார்.



பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் நிலையில் ஆதரவாளர் ஒருவர் அவரின் உருவப் படத்தை முத்த மிட்டவாறு காணப்படுகிறார்.

# தலைப்பாகை அணிந்த மூன்று சீக்கிய மாணவர்கள் பிரான்ஸ் பாடசாலையிலிருந்து நீக்கம்

(பரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பரிசில் தலைப்பாகை அணிந்த மூன்று சீக்கிய மாணவர்கள் பள்ளியில் இருந்து நீக்கப்பட்டனர். பிரான்சில் பள்ளிக்கூட மாணவ, மாணவியர் மதச்சின்னங்கள் மற்றும் மதத்தைக்குறிப்பிடும் பிரத்தியேக ஆடைகள் அணிவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இத்தடைச்சட்டத்தின்படி முக்காடு அணிந்த முஸ்லிம் சிறுமியர் எட்டுப்பேர் பள்ளியில் இருந்து நீக்கப்பட்டனர். இச்சட்டத்தின்படி சீக்கிய மாணவர்கள் பள்ளியில் இருந்து நீக்கப்படுவது இதுவே முதன்முறை. வடகிழக்குப் பரிசில் பாபிக்னி என்ற இடத்தில் உள்ள லூயிஸ் மைக்கேல் உயர்நிலைப்பள்ளியில் இந்நடவடிக்கை வெள்ளிக்கிழமை எடுக்கப்பட்டது. முன்னதாக தலைப்பாகையை அகற்ற இச்சிறுவர்கள் மறுத்ததையடுத்து பள்ளி நிர்வாகம் செப்ரெம்பர் 23ஆந் திகதி அவர்களை இடைநிறுத்தம் செய்தது. இதைஎதிர்த்து சீக்கியர்கள் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தனர்.

# ஈராக்கில் தீவிரமடையும் மோதல்கள்
# பலூஜாவைக் கைப்பற்ற அமெரிக்கா விமானத் தாக்குதல்

ஈராக்கில் கெரில்லாக்கள் வசம் உள்ள பலூஜா நகரை மீளக் கைப்பற்றுவதற்கு அமெரிக்க யுத்த விமானங்கள் தீவிர தாக்குதல் நடத்தியுள்ள அதேவேளை நகர்ப்புற பகுதியில் கிளர்ச்சிவாதிகளும் அமெரிக்கப்படையினரும் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

பலூஜா நகரை மீளக் கைப்பற்றும் நடவடிக்கையை இனிமேலும் தாமதிக்க முடியாதென இடைக்காலப் பிரதமர் இயாத் அல்லாவி தெரிவித்துள்ளார்.

ஏ.சி.130 ரக யுத்த விமானம் பலூஜா நகர்மீது குண்டுத்தாக்குதல், பீரங்கி மற்றும் இயந்திரத் துப்பாக்கித் தாக்குதலையும் நடத்தியுள்ள அதேவேளை அபுமுஷாக் இயக்கத்தின் தீவிரவாதிகளும் சதாமின் ஆதரவாளர்களான ஆறாயிரம் வீரர்கள் தங்கியுள்ளதாக நம்பப்படுகின்ற பலூஜா நகரைக் கைப்பற்றுவதற்கு அமெரிக்க இராணுவத்தினர் நகரின் இரு பக்கத்திலும் நிலைகொண்டுள்ளனர். பலூஜா நகரில் உள்ள பிரதான வைத்திய சாலையையும் துப்பாக்கித் தாக்குதலை மேற்கொள்ளாமல் ஈராக்கிய இராணுவம் கைப்பற்றியுள்ளது. அத்துடன் அங்கு தங்கியிருந்த பலரின் கண்கள் கட்டப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க இராணுவத் தளபதி கருத்து வெளியிடுகையில்,

பிரதம மந்திரியின் பணிப்புரையை தாங்கள் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். ஈராக்கில் சனவரி மாதம் பொதுத்தேர்தலை நடத்துவதற்கு நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தவெனப் பிரதமர் இயாத் அல்லாவி ஈராக்கில் அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்துள்ளமை தெரிந்ததே.

ஈராக்கில் தேர்தலை நடத்துவதன் மூலமே அதன் புனரமைப்பு நடவடிக்கைக்கான அடிக் கல்லை நாட்ட முடியுமென அமெரிக்க சனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

# மெஜிடோனியாவில் சிறுபான்மையினருக்கு ஆதரவான சர்வசன வாக்கெடுப்பு தோல்வியில் முடிவு

மெஜிடோனியாவில் அல்பேனியா சிறுபான்மையினருக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் சட்டமொன்றை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட சர்வசன வாக்கெடுப்பு குறைந்தளவிலான வாக்காளர்களின் வருகை காரணமாகத் தோல்வி கண்டுள்ளது.

சர்வசன வாக்கெடுப்பை செல்லுபடியாக்குவதற்கு 50வீதமான வாக்குகள் தேவையான நிலையில் 26.3 வீதமானோரே வாக்கெடுப்பில் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த சர்வசன வாக்கெடுப்பின் முடிவுகள் அமெரிக்கா, பெல்ஜியம் உட்பட சுயாதீன கண்காணிப்பாளர்களை மகிழ்விக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வசன வாக்கெடுப்பு தோல்வி காண்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும், மெஜிடோனியாவிடம் தெளிவாகக் கூறியிருந்தன.

மிதவாதிகளை ஊக்குவிக்கும் வகையில் மெஜிடோனியா என்ற பெயரை அங்கீகரிப்பதாக அமெரிக்கா கடந்தவாரம் அறிவித்திருந்தது. கிரேக்கத்தின் வடக்கு மாநிலம் என்ற பெயரைப் பயன்படுத்துமாறும் கிரேக்கத்தின் பல்லாண்டுகால வேண்டுகோளை நிராகரிக்கும் வகையில் அமெரிக்காவின் அறிவிப்பு அமைந்திருந்தது.

# அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ஆர்மிரேஜ் தென்னாசிய விஜயமாக பாகிஸ்தான் பயணம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் பிரதிராஜங்க செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் நேற்று பாகிஸ்தானிற்கு விஜயம் செய்துள்ளார்.

ஏற்கனவே இந்த விஜயம் திட்டமிட்டப்பட்டபோதும் அமெரிக்காவின் சனாதிபதித் தேர்தலின் பின்னான ஜோர்ஜ் டபிள்யு.புஷ் இன் நிர்வாகத்தில் மேற்கொள்ளும் உயர்மட்ட தென்னாசிய விஜயமாக இது கருதப்படுகின்றது.

றிச்சட்ஆர்மிரேஜ் பாகிஸ்தானில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அந்நாட்டுசனாதிபதி பர்வேஷ் முஷாரப், பிரதமர், வெளிநாட்டமைச்சர் ஆகியோரைச் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புஷ்ஷின் அடுத்த கட்ட ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவு குறித்த விடயங்கள் இந்த விஜயத்தின் போது உறுதிப்படுத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தாக்குதல் தீவிரம்

ஈராக்கில் அமெரிக்கப்படைகளுக்கெதிராகத் தாக்குதல் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை பலூஜாவில் தீவிரவாதிகள் நடத்திய கார்க் குண்டு றொக்கெட் மற்றும் சிறு பீரங்கித் தாக்குதலில் 50இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 60இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதில் 24பேர் அமெரிக்கர் என்பது குறிப்பிடத்தக் கது. பலூஜாவில் பத்தாயிரத்திற் கும் மேற்பட்ட அமெரிக்கப்படை யினர் குவிந்திருப்பதே ஈராக் தீவிரவாதிகளின் ஆக்ரோசத்திற்குக் காரணம் என்று தெரியவந்துள்ளது. அல்-ஹைதா இயக்கத்துடன் இணைந்த தீவிரவாத அமைப்புக்கள் இத்தாக்குதல் சம்பவங்களுக்கு உரிமைகொண்டாடி வருகின்றனர்.



பலூஜாவில் தீவிரவாதிகள் ஊடுருவியதையடுத்து அங்கு தேடுதல் பணியில் ஈடுபடும் அமெரிக்க ஈராக்படையினர்.



பலூஜாவுக் கண்மையில் காவலில் இருக்கும் அமெரிக்கப் படையினரின் இயந்திரத் துப்பாக்கிக் குழாயில் தொங்க விடப்பட்டிருக்கும் பிரபல கேலிச் சித்திர நடிகர்களான வின்னி தபூஹ்வும் டஃபி டக்கும்.

# ஐவரி கோஸ்டில் பிரான்ஸ் இராணுவத்திற்கு எதிரான தாக்குதல் உடன் நிறுத்தப்பட வேண்டும் என கோரிக்கை

ஐவரி கோஸ்டில் பிரஞ் இராணுவத்திற்கெதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் முடிவிற்கு கொண்டு வரப்பட வேண்டுமென்று அந்நாட்டு சனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரெஞ் இராணுவத்தினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட நடவடிக்கையில் தலைநகர் அபுஜாவினிலுள்ள வீதிகளில் மேற்கொள்ளப்படும் ரோந்து நடவடிக்கைகளைப் பயன்படுத்தி சர்வதேச விமான நிலையத்தையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் இடம் பெற்ற கொள்ளை நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கென மேலதிக பிரெஞ் வீரர்கள் விமானமூலம் அங்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, நேச நாடுகள் என்பவற்றின் வற்புறுத்தல் காரணமாக ஐவரி கோஸ் சனாதிபதி முதல் தடவையாக தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு வேண்டுகோளை விடுத்துள்ளார். நாட்டு மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் மக்களை அமைதியாக இருக்கும் படியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைவரும் தங்களது இல்லங்களிற்குத் திரும்ப வேண்டும் என்றும், ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமென்றும் அவர் கேட்டுள்ளார்.

# தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு ஒரு இலட்சம் பனம் விதைகள் நடுகை

## பூநகரியில் முதற்கட்டப் பணிகள் ஆரம்பம்

(பூநகரி)

**தமிழீழ மாவீரர்நாளை முன்னிட்டு பூநகரியில் ஒரு இலட்சம் பனம் விதைகளை நடுகை செய்யும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக மூவாயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.**

பூநகரிப் பிரதேச அரசியல் துறையினரும், உதவி அரச அதிபர் பணிமனையினரும் இணைந்து இதற்கான திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதற்கட்டமாக மூவாயிரம் பனம் விதைகள் நாட்டப்பட்டன. மேற்கொண்டும் இப்பணியைத் தொடரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக சுமார் ஒரு இலட்சம் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளதாக பூநகரிப் பிரதேச அரசியல்துறையினர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பூநகரியில் அணைக்கட்டு ஒன்றும் புனரமைக்கப்பட்டு வருகின்றது. பிரதேச பொது அமைப்புக்கள் இணைந்து இதற்கான வேலைகளை கடந்த வெள்ளியன்று ஆரம்பித்தன. சுமார் ஒரு வார காலத்தை இலக்காகக் கொண்டு இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# துணுக்காய்-தென்னியங்குளத்தில் பொது நோக்கு மண்டபம் திறப்பு

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசத்தின் தென்னியங்குளம் கிராமத்தில் கெயார் நிறுவனத்தின் ஐந்தரை இலட்சம் ரூபா நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் பாண்டியன்குளம் துணுக்காய் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத் திறப்பு விழா நிகழ்வு கடந்த வியாழக்கிழமை தென்னியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சு.பாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை துணுக்காய்ப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் ஏற்றியதைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழக கொடியை பாண்டியன் குளம் துணுக்காய் தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் சி.கஜேந்திரனும், பாண்டியன்குளம் துணுக்காய் புனர்வாழ்வு கழக கொடியை கழக பொருளாளர் அ.பரமேஸ்வரனும் ஏற்றி வைத்தனர்.

பொதுநோக்கு மண்டபத்தின் பெயர்ப் பலகையினை கெயார் திட்ட இணைப்பாளர் சந்திரமோகன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தினை துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் நா.நந்தகுமார் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து கருத்துரைகள் இடம் பெற்றன.(24)

# குறிசுட்டகுளம் புனரமைப்பு பணிகள் நிறைவடைந்தன

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குளங்கள் பல புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றில் 10 இலட்சம் ரூபா திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட குறிசுட்டகுளம் புனரமைப்பு வேலைகள் முடிக்கப்பெற்று அக்குளத்தின் வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

அத்துடன் 10 இலட்சம் ரூபா திட்டத்தில் புனரமைக்கப்பட்ட குளங்களில் குறிசுட்டகுளம் மட்டுமே மாவட்டத்தில் பூரணமாக வேலை முடிக்கப்பட்ட முதலாவது குளம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கு)

# வவுனியா நகரின் சுகாதார நிலைமையை ஆராய விஜயம்

(வவுனியா செய்தியாளர்)

வவனியா நகரின் சுகாதார நிலை தொடர்பாக அவதானிப்பதற்காக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், வவுனியா நகரசபைச் செயலாளர் சரவணபவன் ஆகியோர் திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் வவுனியா நகரம், மீன்சந்தை, கோழிச்சந்தை, மரக்கறி மொத்த விற்பனைச் சந்தை, சில்லறை விற்பனைச் சந்தை ஆகிய பகுதிகளுக்குச்சென்று நிலைமைகளை அவதானித்தனர். அத்துடன் வியாபாரிகளுடன் கலந்துரையாடி சுகாதாரத்தைப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

அத்துடன் மரக்கறி சில்லறை விற்பனைச் சந்தையை புனரமைத்துத் தருவதாகவும் வியாபாரிகளுக்கு உறுதி அளித்துள்ளனர். (10)

# மருத்துவ மாதுக்களாக தெரிவானோர் உடன் பயிற்சியில் பங்கேற்க கோரல்

(முல்லை)

2004 ஆம் ஆண்டில் மருத்துவ மாதுக்களுக்கான தெரிவு அண்மையில் முல்லை மாவட்டத்தில் நடைபெற்றிருந்தது. இதில் 32 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ள போதும் 12 பேர் மட்டுமே இதுவரை பயிற்சிக்கு வருகை தந்துள்ளதாகவும் ஏனைய 20 பேரும் உடனடியாக பயிற்சியில் கலந்துகொள்ளும் படி முல்லை மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண வைத்தியசாலை தாதிகள் பயிற்சிக்கல்லூரியில் நடைபெறுகின்ற இப்பயிற்சி கடந்த 27 ஆம்திகதி ஆரம்பமாகியுள்ளது. இதில் தெரிவு செய்யப்பட்டவர்களையும் உடன் பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

ப.ஜனோயா முள்ளியவளை, த.கிரிசாந்தி முள்ளியவளை, இ.யுவறாஜினி முல்லைத்தீவு, வ.விதர்சி புதுக்குடியிருப்பு, பொ.தனலக்சுமி நட்டாங்கண்டல், செ.பாமினி முள்ளியவளை, பா.சத்தியபிரபா முள்ளியவளை, இ.பாரதி வவுனிக்குளம், சி.சுகந்தினி புதுக்குடியிருப்பு, தே.ஜெனிற்றா செல்வபுரம் முல்லைத்தீவு, சி.சுபாசினி ஒட்டுசுட்டான், சி.திலீபா அளம்பில், பா.லக்சனா அளம்பில், தேவலோஜினி புதுக்குடியிருப்பு, அ.நந்தினி புதுக்குடியிருப்பு, கோ.சரிதா முள்ளியவளை, மா.வர்ணமாலி முல்லைத்தீவு, வி.சுகந்தினி மல்லாவி, வே.உதயகுமாரி தர்மபுரம், செ.பிரேமலதா நட்டாங்கண்டல் ஆகியோர் இதுவரை பயிற்சிக்கு செல்லாதவர்களாகும்.

## கலந்துரையாடல்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேச தொழிற்சங்க இணைப்பாளர் சிவாவின் ஒழுங்குபடுத்தலில் மாவீரர் நாள் நிகழ்வு தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் நாளை 10 ஆம் திகதி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மண்டபத்தில் பி.ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் முள்ளியவளை பிரதேசத்திற்குட்பட்ட சகல உழவு இயந்திர உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஆ)

## சிரமதானம்

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசத்தில் தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு பொது அமைப்புக்களும், பாடசாலை மாணவர்கள், பொதுமக்களும் கடந்த முதலாம் திகதி முதல் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். (24)

# 15 ஆண்டுகள் நிறைவடையும் ஜெயபுரம் அ.த.க.பாடசாலையின் நிலை?



கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி கோட்டத்தில் அமைந்துள்ள ஜெயபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை எந்த வித அடிப்படை வசதிகளும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் பற்றைகாடுகளின் நடுவில் தனது 15ஆவது ஆண்டு நிறைவு விழாவை நாளை கொண்டாடவுள்ளது.

1989ஆம் ஆண்டு தரம் 05 வரையான மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கக் கூடியதாக ஜெயபுரம் அ.த.க. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து 1991ஆம் ஆண்டு பூநகரியில் நடந்த இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மாணவர்களை இணைத்து, ஜெயபுரம் அ.த.க. பாடசாலையில், பூநகரி மகாவித்தியாலயமும் இயங்கிவந்தது.

இவ்வாறு பெருந்தொகையான மாணவர்களைக் கொண்டு இயங்கிவந்த இப்பாடசாலை மீண்டும் யாழ்ப்பாண இடம்பெயர்வு மாணவர்களையும் ஏற்று கொண்டு தரம் 11 வரை இயங்கத் தொடங்கியது.

அத்துடன் கிளிநொச்சி இடம்பெயர்வு மூலம் சென்ற மாணவர்களும் இப்பாடசாலையிலேயே கல்வி கற்றனர்.

தற்பொழுது 465 மாணவர்களைக் கொண்டு இயங்கும் இப்பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றுமில்லை. தற்காலிகமான கொட்டகைகள் நான்கு உள்ளன. இதில் இரண்டு கொட்டகைகளின் நிலை மிகவும் மோசமாகவுள்ளது.

மழை பெய்யும்வேளை, மாணவர்கள் குடைபிடித்துக் கொண்டு இருந்து கல்வி பயில்வதை நேரடியாகப் பார்க்க முடிந்தது. மழை நீர் உட்புகும் நிலையில் காணப்படுகின்றது. ஒரு கொட்டகை அரைவாசி பகுதியின் கூரையில் எதுவுமே இல்லாமல் திறந்த வெளியாக காட்சியளிக்கின்றது.

இம்மாணவர்களில் தரம் மூன்று தொடக்கம் 08ஆம் ஆண்டு வரைக்கும் கற்கும் மாணவர்கள் தற்காலிக கொட்டகையில் தறப்பாள் விரித்து அதன்மேல் இருந்து கற்கின்றனர். மழைக் காலத்தில் இக்கொட்டகைகளுக்குள் மழை நீர் உட்புகும்போது நிலைமை கவலைக்குரியதாக காணப்படுகிறது.

மேலும், பூநகரி கோட்டத்தில் இயங்கும் இப்பாடசாலைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து நான்கு ஆசிரியர்கள் வருகை தருகின்றனர். இவர்கள் தங்கி நின்று கற்பிப்பதற்கு





விடுதி இல்லை. பாடசாலைக்கு மலசல கூட வசதிகளும் இல்லை.

மேலும், பாடசாலை வளாகத்தில் பற்றைக் காடுகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. விளையாட்டு மைதானம் நீர்தேங்கிக் காட்சியளிக்கும் அதேவேளை, பாடசாலை வளாகம் எல்லைகள் அற்ற நிலையில் பரந்த இடமாகவும் காணப்படுகின்றது.

இத்தனை வசதிகளும் அற்று இருக்கும் இப்பாடசாலை கற்றல் செயற்பாட்டிலும் விளையாட்டுப் போட்டிகளிலும், போட்டிப் பரீட்சைகளிலும் முன்னணியிலேயே இருந்து வருகின்றது.

மேலும், இவ்வருடம் இடம்பெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்டத்தில் 03ஆம் இடத்தினை பெற்று 15ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடும்போது அம் மாணவர்களைக்கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

எனவே, மேற்படி பாடசாலையின் நிலைமையினைச் சீர்செய்ய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் முயற்சி எடுத்த போது கட்டடங்கள், மலசலகூடம், மைதானம் என்பனவற்றை அமைத்து தருவதாக உறுதி மொழிகள் கூறப்பட்டதே தவிர இதுவரைக்கும் எந்த வேலைத் திட்டமும் ஆரம்பிக்கப்படவில்லை.

எனவே, 15ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் ஜெயபுரம் அ.த.க. பாடசாலை அடுத்த வருடத்திலாவது அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்ள ஆவன செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

குகன் தீபன்

# ஆண்டு ஒன்றில் பிள்ளைகளைச் சேர்க்க பணம் பெறுவதில் பிரபல பாடசாலைகள் போட்டி!

## அறிவுறுத்தல்களைப் பின்பற்ற அதிகாரிகள் பின்னடிப்பு

(நல்லூர்)

**யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளில் பிள்ளைகளை ஆண்டு ஒன்றில் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் ஆரம்பமாகியுள்ளன. இவ்வேளை முன்னணிப் பாடசாலைகள் பணம் வசூலிப்பதில் அதிக அக்கறை காண்பித்து வருகின்றன.**

முன்னணிப் பாடசாலைகள் பிள்ளைகளுக்கு நேர்முகப் பரீட்சையென அழைத்து பெற்றோர்களிடம் இருந்து நன்கொடைகள்,அன்பளிப்புக்கள் என்று பணம் பெறுவதில் அதிக அக்கறை காட்டும் செயற்பாட்டில் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் கூடிய மாணவர்கள் சித்தி அடைந்த பாடசாலைகள் பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் நன்கொடைகள் அன்பளிப்புக்களை வேண்டி நிற்கின்றன.

இதேநேரம் ஏனைய பாடசாலைகளும் நாமும் ஒன்றுக்கும் சளைத்தவர்கள் அல்ல. சில நூறுகள் முதல் சில ஆயிரங்கள் வரை நன்கொடைகள் அன்பளிப்புக்கள் பெறுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன.

அரச சுற்று நிருபத்தின் கீழ் அரச பாடசாலைகள் மாணவர்களை சேர்ப்பதற்குநன்கொடைகள், அன்பளிப்புக்கள் அறவிடக்கூடாது என சுற்று நிருபங்கள் அனுப்புகின்ற போதிலும் இதனை அமுல்படுத்த வேண்டிய அதிகாரிகள்கூட, மாலைகள், பிரதம விருந்தினர் அன்பளிப்புக்கள் என்பதற்காக கண்டும் காணாத மாதிரி இருந்து வருகின்றார்கள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு இவ்வளவு பணத்தொகை எங்கு இருந்து வருகின்றது என்ற கேள்விகளைக் கூட உயர் அதிகாரிகள் கேட்பதில்லை. இந்நிலைமை பாடசாலை நிர்வாகத்திற்கும் மற்றும் இணைந்து இருப்பவர்களுக்கும் கொண்டாட்டமாக அமைகின்றது.

சிறுவர் நல உரிமைகள் பேசும் அமைப்புக்களும்கூட வாய்ப்பந்தல் போட்டுவிட்டு கண்மூடி மௌனமாக இருந்து விடுகின்றன என பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

யாழ்ப்பாண நகரை அண்டிய முன்னணிப் பாடசாலைகளுக்கு பத்து கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் இருந்து வரும் பிள்ளைகள் கல்வி கற்க நன்கொடைகள், அன்பளிப்புக்கள் வழங்க முடியாத பாடசாலை அயல் பிள்ளைகள் வேறு பாடசாலைகள் தேடி பல கிலோ மீற்றர் தூரம் நடக்கும் அவலமும் கூடக் காணப்படுகின்றது.

இச்செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உயர்அதிகாரிகள் நடவடிக்கையெடுக்க வேண்டும் எனப் பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றார்கள். (41)

# முக்கிய கூட்டம்

யாழ். கரவெட்டிப் பிரதேச அபிவிருத்தித் திட்ட நடைமுறை மற்றும் திட்டமிடல் தொடர்பான முக்கிய கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு கர.வெட்டிப் பிரதேசச் செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (33)

# படையினருடன் உறவாடும் இளைஞர்கள் அடாவடி!

## பொது மக்கள் பெரும் விசனம்

(நல்லூர்)

அச்சுவேலி பொலிசாரின் அசிரத்தையான செயற்பாட்டினால் புத்தூர் நீர்வேலி சிறுப்பிட்டிப் பகுதிகளில் இளைஞர்களின்அடாவடிகள் அதிகரித்துக்காணப்படுவதாக அப்பகுதிகளில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள், வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

அண்மையில் தனியார் கணினி நிலையத்தின் பெயர்ப் பலகையை கழற்றி இளைஞர் குழு உடைத்து விட்டுச் சென்றுள்ளதுடன், ஏற்கனவே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் எந்த வகையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

ஊரில் அடாவடித்தனம் புரிந்து வரும் இவ் இளைஞர்கள் பொலிஸ், இராணுவத்துடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டவர்களாக காணப்படுவதினால் பொதுமக்கள் எவரும் இவர்களுடன் கதைப்பதற்குக் கூட பயப்படுகின்றார்கள்.பொது மக்களின் செயற்பாடுகளுக்கு இடையூறாக இருக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளும் இவர்களை அடக்குவது யாரென பொதுமக்கள் அங்கலாய்க்கின்றார்கள். (41)

# கிராம மட்ட அமைப்புக்களை அபிவிருத்தி செய்ய முயற்சி

யாழ். குடாநாட்டில் உள்ள கிராம மட்ட அமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் போரூட் மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்தானிகராலயம் ஆகியன இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

அந்த அடிப்படையில் யாழ். குடாநாட்டில் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள சனசமுக நிலையங்கள் மற்றும் விளையாட்டுக்கழகங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கான நிதி உதவி உட்பட பல்வேறு விதமான உதவிகளையும் வழங்கி வருகின்றன.

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டின் பின்தங்கிய பிரதேசங்களின் சமூக மேம்படுத்தலை இலக்காகக் கொண்டே இவ் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (33)

# குடாநாட்டில் "பெண் உள்ளம் உயர்தல்" நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுப்பு

பெண்கள் பண்பாட்டு மையம் "பெண் உள்ளம் உயர்தல்" எனும் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் இவ்வேலைத் திட்டத்தை ஊக்குவித்து வருகின்றார்.

வட்டுக்கோட்டைப் பகுதி, வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இந்த வேலைத் திட்டம் பல்வேறு அனுபவங்களுடன் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தப் பண்பாட்டு உயிர்ப்பூக்குனர்கள் கிராமங்களில் ஒவ்வொரு வீட்டுப் படலையாகத் திறந்து அங்குள்ள அங்கத்தவர்களுடன் குறிப்பாகப் பெண்களுடன் கதையாடல் நிகழ்த்துகின்றனர். பெண் உள்ளம் அறியும் திறன்களில் இவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

வீடுகளில் சென்று, உடனிருந்து, அவர்களின் காரியங்களோடு இணைந்து கதையாடுவது இவர்களது வேலை. இவர்கள் தமக்குக் கிடைத்த அனுபவங்களை பின்வருமாறு கூறுகின்றனர்.

"தாய்மார் தமது பிள்ளைகளையும், ஊர் உலகம் தெரிந்தவர்களாக மாற்றித் தரும்படி வேண்டுவதாகவும்" இளம் பெண்கள் "வீட்டு வாசல் வரை வரும் துணிவையாவது எங்களுக்குத் தாருங்கள்" எனத் தம்மை அளாவுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

சில காலத்தின் முன்பு தலை நிமிர்ந்து தமது சொந்தக் காரியங்களையே துணிச்சலாக செய்ய முடியாமலும் கருத்துக்களை வெளியிட முடியாமலும் இருந்த இவர்கள் "பெண்கள் பண்பாட்டு மையம்" தொடர்ந்து நடத்தும் "ஆற்றலைத்தேடி.." பயிற்சிப் பட்டறையின் மூலம் புடம் போடப்படுகின்ற இவர்களின் எழுச்சியும் செயல்முனைப்பும் இவர்களைப் போன்ற ஆயிரக்கணக்கான பெண்களை மன இருளில் இருந்து வெளிக்கொணரத் தூண்டும் எனப் பெண் விடுதலை, தேசவிடுதலை, பண்பாட்டு விடுதலை பற்றி விழிப்படையும் ஆதாரவாளர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

ஒடுங்கி உறைந்து போய் ஒன்றும் செய்ய முடியாது என நசிந்து கிடக்கும் எமது பெண்கள் தேச விடுதலைக்கும், நிர்மாணத்துக்கும் உழைத்து உயரிய பண்பாட்டுடன் கூடிய தமிழ்ச் சமூகத்தைக் கட்டியெழுப்ப இவர்கள் முன்னுதாரணங்களாகத் திகழ்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில், எமது தாய் நிலத்தின் விடுதலைக்குப் போராடும் பெண் போராளிகள் இவர்களுக்கு முன்னுதாரணங்களாகத் திகழ்வது கண்டு எனப் பெண்கள் பண்பாட்டு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# படையினர் ஆக்கிரமிப்பால் மனநிலை பாதிப்புற்றவர் வைத்தியசாலையில் அனுமதி!

சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பால் மனநிலை பாதிக்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆசிரியர் ஒருவர் யாழ்ப்பாண வைத்தியசாலையில் உயிருக்குப் போராடி வருவதாகத் தெரியவருகிறது. உசனில் சிறிலங்காப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்ட வீட்டு உரிமையாளரான மார்க்கண்டு முத்துப்பிள்ளை என்பவரே மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் உயிருக்குப் போராடி வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இப்பகுதியில் உள்ள உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் இளைப்பாறிய ஆசிரியர் ஒருவரே அபாயக்கட்டத்தில் உள்ளதாகத் தெரியவருகிறது. நீண்ட நாட்களாக படையினரிடம் வீட்டைப் பறிகொடுத்துவிட்டு தனது சொந்த இருப்பிற்காக, உரிமைக்காக வீட்டைத் தரும்படி போராடிக் களைத்த நிலையிலேயே இவருடைய மனநிலை பாதிக்கப்பட்டு இன்று ஆபத்தான கட்டத்தில் சென்றிருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். நீண்ட பல நாட்களாக படையினரிடமும் பல்வேறு தரப்பிடமும் தனது ஆதங்கத்தை தெரிவித்து வந்த இவர், உயிருக்குப் போராடி வரும் செய்தி இப்பகுதி மக்களை கண்ணீர் வெள்ளத்தில் ஆழ்த்திவருகிறது. (28)

# படையினரின் சூனியப் பிரதேச நடைமுறையால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பாதிப்பு

## தெல்லிப்பளை விவசாயிகள் கூ. சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

படையினரின் பாதுகாப்பு சூனியப் பிரதேச நடைமுறை காரணமாக பல நூற்றுக்கணக்கான விவசாயிகள் தம் விவசாய நிலங்களை இழந்து பாதிக்கப்பட்டிருப்பதாக தெல்லிப்பளை விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

தெல்லிப்பளைப் பகுதியில் உள்ள இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்க நிலைகளை அண்மித்துள்ள விவசாய நிலங்களில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் பல விவசாயிகள் பல்வேறு இராணுவக் கெடுபிடிகள் மத்தியிலும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் படையினர் பாதுகாப்பு வலயங்களின் முன்னரங்க நிலைகளில் இருந்து 600 மீற்றர் தூரத்திற்கு அப்பாலேயே மக்கள் நடமாடமுடியும் என்ற நடைமுறையை கடுமையாக அமுற்படுத்தியதுடன், இவ் 600 மீற்றர் நீளத்துக்கு உட்பட்ட பிரதேசத்தை பாதுகாப்பு சூனியப் பிரதேசம் என பிரவேசத்தடை பதாகைகளையும் பொருத்தியுள்ளனர்.

படையினரின் சூனியப் பிரதேசப் பிரகடனத்தால் பாதுகாப்பு வலய முன்னரங்க நிலைகளில் இருந்து 600 மீற்றர் தூரத்திற்குட்பட்ட பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட படையினர் முற்றாகத் தடை விதித்துள்ளனர். இதனால் இப்பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட 600 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டி இவ்விவசாயிகள் சங்கம் ஆட்சேபம் வெளியிட்டுள்ளது. (33)

# அபிவிருத்திச் சபைக் கூட்டம்

சாவகச்சேரி வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை மீண்டும் தனது செயற்பாட்டை முன்னெடுத்து இருக்கிறது. நேற்று விசேட அங்குரார்ப்பாணக்கூட்டம் நடைபெற்றது. முன்னாள் தென்மராட்சி பிரதேசசெயலாளர் கேதீஸ்வரன், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ், சாவகச்சேரி தலைமை மருத்துவர் கலாநிதி அம்பிகைபாகன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் மருத்துவமனை அபிவிருத்தி சம்பந்தமாய் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.மருத்துவமனைக்கென அதிசக்தி கொண்ட மின் பிறப்பாக்கியை அமைப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்களிடம் நிதியுதவி கோரப்படுவதுடன் சாவகச்சேரி வைத்தியசாலையை புனரமைப்பது சம்பந்தமாய் துரித கதியில் அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது என்றும், அபிவிருத்திச் சபைக்கான நிதியை திரட்டுவதற்கு கொடிதினம் மூலம் மக்களிடம் இருந்து நிதியை பெறுவதென முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதற்கான விசேடமான கூட்டம் ஒன்று எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெற இருப்பதாகவும் இதில் இப்பிரதேச வளர்ச்சியில் அக்கறையுள்ள அனைவரும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (28)

# வாக்காளர் பட்டியலை 15 முதல் பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தைச் சோந்த வாக்காளர்கள் தமது வாக்காளர் பட்டியலை (இடாப்பு) எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் யாழ்.அரச செயலகத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் தமது பெயர்களை இணைத்துக்கொள்வதற்காக விண்ணப்பித்தோர் தமது பதிவுகள் தொடர்பான விடயங்களை இடாப்பில் பார்வையிட்டு அதுகுறித்த ஆட்சேபனைகளைத் தெரிவித்து அதில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் குறித்து மாவட்ட தேர்தல் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# வரவு-செலவுத் திட்டமும் எதிர்கொள்ளும் சவால்களும்

இன்னும் சுமார் ஓரிரு வாரங்களில் சந்திரிகாவின் கூட்டணியரசு தனது கன்னி வரவு செலவுத் திட்டத்தைப் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது. வரவு-செலவுத் திட்டம் என்பது ஒரு நாட்டின் ஆட்சியைப் பற்றிய ஒரு மதிப்பீடு என்று கூறலாம். சந்திரிகா அரசு பதவி ஏற்று சுமார் 7 மாதங்கள் முடிவுற்ற தறுவாயிலும் அதன் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க பெரும்பாடுபட்டு தற்போது ஓரளவு தேறிய நிலைக்கு வந்துள்ளது. இந் நிலையில், அதன் முதலாவது வரவு-செலவுத் திட்ட யோசனைகள் இந்நாட்டின் பொது மக்களின் அபிலாசைகளையும் தேர்தல் கால வாக்குறுதிகளையும் நிறைவேற்றுமா என்ற வினாவுக்கு விடை தேடுவது பொருத்தமானதாகும்.

2001ஒக்ரோபருக்கு முதல் சந்திரிகாவின் பொ.ஐ. முன்னணி ஆட்சியிலிருந்த வேளை, நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதம் பூச்சியமாகக் காணப்பட்டது. 2001ஆம் ஆண்டு ரணிலின் ஐ.தே.முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னர் அதில் ஓரளவு மாற்றம் காணப்பட்டது. அத்துடன் அதன் ஆட்சிக் காலத்தில் அரசின் செலவீனத்தைக் குறைத்துக் கொண்டு நிர்வகித்தது. சிறிலங்காவில் அண்மைக் காலங்களில் வரவு-செலவு முகாமைத்துவத்தில் வரி மூல வருமானம் வீழ்ச்சி காணப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இது 1998ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்கள், சேவைகளுக்கான வரி அறவீட்டில் அக்கறை செலுத்தாமையால்


பாராதவாறு அதிகரித்துள்ளது. தேசிய வருமானத்தில் 6.8 வீதம் துண்டு விழும் தொகை மதிப்பிடப்பட்டிருப்பினும், அது 7.3 வீதமாகவுள்ளது. ஆயினும், திறை சேரி அதிகாரி ஒருவர் அது 8 வீதமாக வைத்திருக்க முயற்சி எடுக்கப்படும் என்று கூறியிருப்பினும், வருட இறுதியில் துண்டு விழும் தொகை 9 வீதத்திற்கு மேல் செல்லும் நிலை தோன்றியிருக்கின்றது. 1994 முதல் 2001 வரை துண்டு விழும் தொகை 10.8 வீதமாக இருந்த பற்றாக்குறை 2004ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அது 10 வீதமாக இருந்தபோதும் அது பெரிதாகப் பாதிக்கவில்லை. சிறிலங்கா நிதியமைச்சரின் இடைக்கால அறிக்கையின் படி புனர் நிர்மாணப் பணிகளுக்கான ஒதுக்கீடு

இந்நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையை அதிகரிக்க விசேடமாக கடன் சுமையும் இரண்டு தசாப்தங்களாக நீடிக்கும் கொடிய யுத்தமும் காரணமாகின. அவ்வாறு இருக்கும்போது அரசு மேலும் யுத்த தளபாடங்களைக் கொள்வனவு செய்யும் நோக்கில் பாதுகாப்பு அமைச்சிற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**முடிவுத் திகதி:- 25.11.2004 நண்பகல் 12.00 மணி**

## கேள்விகள்

1. சமூகம் சார் புனர்வாழ்வு (சீ.பி.ஆர்) என்றால் என்ன?
2. மாற்றீடான வலுவுள்ளோரின் புனர்வாழ்வுக்கு சமூகம் ஏன் பொறுப்பெடுக்க வேண்டும் என்பதற்கு 3 காரணங்கள் தருக?
3. ஆரம்ப இனங்காணலும் சிகிச்சையும் செய்வதால் தடுக்கக்கூடிய நிலைமைகள் இரண்டு தருக?
4. ஊனம் உண்டாக்கும் எவ்விரண்டுநோய்களை நோய்த்தடுப்பு ஊசிகள் மூலம் தடுக்கலாம்?
5. மூளைவளர்ச்சி குறைந்தோருக்குத் தங்களது சுய தேவைகளைப பூர்த்திசெய்யக்கூடிய வேலைகளைப் பழக்கலாமா? ஆம் எனில் எவ்வாறு என்பதனைத் தருக?
6. மாற்றீடான வலுவுள்ளோரின் விசேட தேவைகள் 3 தருக?
7. சிசுவில் (கருப்பையில் குழந்தை வளரும் போது) ஏற்படும் குறைபாடுகளை எவ்வாறு குறைக்கலாம்?
8. கிளி/ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் 10 தருக? பயிற்சிகள் மூன்று தருக?
9. கிளி/ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் தனது 15 ஆவது ஆண்டு விழாவை எந்த வருடத்தில் கொண்டாடவுள்ளது?
10. சென்ற வருடம் மார்கழி 3 ஆம் திகதி கிளி/ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால் வெளியிடப்பட்ட சஞ்சிகையின் பெயர் என்ன?
11. மாற்றீடான வலுவுள்ள குழந்தையின் கல்வி உரிமை பறிக்கப்பட்டால் நீதிமன்றில் அதற்கு எதிராக வழக்குத் தொடரும் சட்டம் எது?
12. சாதாரண பாடசாலையில் மாற்றீடான வலுவுள்ள பிள்ளைகளுக்கான அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வித் திட்டம் எது?
13. கிளி/மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்க இலச்சினையில் காணப்படும் குறியீடுகள் எத்தனை? அவை எவற்றைக் குறிக்கின்றது?
14. கிளி/மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் தாரக மந்திரம் என்ன?
15. சமூகம் சார் புனர்வாழ்வின் பண்புகள் 5 தருக?
16. ஊனமுற்ற பெண்களுக்கு சமூகத்தால் இழைக்கப்படும் வன்முறையை தடுப்பதற்கு நீர் கூறும் ஆலோசனைகள் யாவை?
17. கிராமிய சமூகம் சார் புனர்வாழ்வுக்குழுவில் குழு அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட வேண்டிய 10 தரப்பினரைத் தருக?
18. கிளி/மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் தொலைநோக்கு என்ன?
19. மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கம், கிளிநொச்சி மாவட்டத்தில் எந்தெந்த உதவி அரச அதிபர் பிரிவுகளில் தனது சேவையைச் செய்கிறது? நிறுவனத்தில் பதிவு செய்த மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை எத்தனை?
20. மாற்றீடான வலுவுள்ளோர்கள் தாங்கள் சுயமாக இயங்குவதற்கு என்ன தேவைகள் நிறைவேற்றப்படவேண்டும்.?

*(சி-10754)*

*சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு*

# மாணவரிடையே நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் வெற்றி பெற்றோர் கௌரவிப்பு

(முல்லை)

2004 சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கரைதுறைப் பற்று பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையே மாகாண சமூக நலத்துறை திணைக்கள பணிப்பிற்கமைய நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கரைதுறைப்பற்று பிரதேச உதவி அரச அதிபர் அ.சோதிநாதன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபர் ம.அன்ரனி ஜெயநாதன் ஏற்றினார்.

மங்கல விளக்கினை கரை துறைப்பற்று உதவி அரச அதிபர் அ.சோதிநாதன், கரைதுறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி நா.தியாகராசா ஆகியோர் ஏற்றினர்.

கருத்துரைகளை முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர், கரை துறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி நா.தியாகராசா முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் ம.ரங்கன் முல்லை. மகாவித்தியாலய மாணவி ம.றொசப்றா, கரைதுறைப் பற்று சிறுவர் நலத்திட்ட உத்தியோகத்தர் வி.சிவபாலசுப்பிரமணியம் ஆகியோர் வழங்கினார்கள். தொடர்ந்து வெற்றி பெற்றோர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஆரம்பப் பிரிவு கவிதைப் போட்டியில் முதலாம் இடம் ச.வரதன் கொக்குளாய் அ.த.க பாடசாலை, 2ஆம் இடம் ஆ.வெறிஸ்லாஸ் முல்லைத்தீவு றோ.க வித்தியாலயம் , 3ஆம் இடம் அ.யதுர்சன் முல்லைத்தீவு றோ.க வித்தியாலயம் கட்டுரை ஆரம்பப் பிரிவில் 1ஆம் இடம் இ.அகல்யாணி, முல்லைத்தீவு றோ.க வித்தியாலயம், 2ஆம் இடம் சௌ. ஜீவராஜ் கொக்குளாய் அ.த.க பாடசாலை 3ஆம் இடம் கி.அமல்ராஜ் முல்லைத்தீவு றோ.க வித்தியாலயம்.

கீழ் பிரிவு கவிதைப் போட்டியில் 1ஆம் இடத்தை நி.குசிக்கா கலைமகள் வித்தியாலயம், 2ஆம் இடம் அ.ஜின்சியா முல்லைத்தீவு றோ.க வித்தியாலயம், 3ஆம் இடம் மெ.விஜிதா கலைமகள் வித்தியாலயம். கீழ்ப் பிரிவு கவிதைப் போட்டியில் 1ஆம் இடம் தே.டக்சன்காந் கொக்குளாய் அ.த.க பாடசாலை, 2ஆம் இடம் ப.துஸ்யந்தினி கலைமகள் வித்தியாலயம், 3ஆம் இடம் அ.மேரி அனுசியா கொக்குளாய் அ.தக பாடசாலை மத்திய பிரிவு கட்டுரைப் போட்டியில் 1ஆம் இடம் சி. சந்யா வித்தியானந்தாக்கல்லூரி, 2ஆம் இடம் ஜெ.கேசரன் வித்தியானந்தாக் கல்லூரி 3ஆம் இடம் அ.நிறோஜினி முல்லைத்தீவு மகா வித்தியாலயம்,

மத்திய பிரிவு கவிதைப் போட்டியில் 1ஆம் இடம் சி.பிரசாந், வித்தியானந்தாக் கல்லூரி, 2ஆம் இடம் கு.கம்சர்யினி கலைமகள் வித்தியாலயம், 3ஆம் இடம் அ.அமுதினி வித்தியானந்தாக் கல்லூரி

மேல்ப் பிரிவு கவிதைப் போட்டியில் 1ஆம் இடம் ஜெ.ஜன்சியா வித்தியானந்தாக் கல்லூரி, 2ஆம் இடம் நி.றௌசி வித்தியானந்தாக் கல்லூரி.

மேல்ப் பிரிவு கட்டுரைப் போட்டியில் 1ஆம் இடம் ம.கொன்செப்ரா முல்லைத்தீவு மகாவித்தியாலயம், 2ஆம் இடம் சி.நீவிதா வித்தியானந்தாக் கல்லூரி, 3ஆம் இடம் க.சர்மிளா, முல்லைத்தீவு மகா வித்தியாலயம் ஆகியோர்களுக்கான பரிசில்களை கரைதுறைப் பற்று உதவி அரச் அதிபர், கரை துறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி, முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர், முல்லை. மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் நிகொட் உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.ரவி, கரைதுறைப்பற்று திட்டமிடல் பணிப்பாளர் திருமதி க.ஜெயபவானி ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்கள், ஆசிரியர்கள், கிராம அலுவலகர்கள் பெற்றோர்கள் எனப பலரும் கலந்துகொண்டனர். (20)

-பாராளுமன்ற உறுப்பினர்களால்-

# பாராளுமன்ற நூலகத்தில் பெற்ற நூல்கள் ஒப்படைக்கப்படவில்லை

(கொழும்பு)

சிறிலங்காவின் பாராளுமன்றத்தில் அமைந்துள்ள நூலகத்தில் இருந்து நூற்றுக்கணக்கான நூல்கள் காணாமற்போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களாக இவ்வாறு நூல்கள் காணாமற்போயுள்ளதாக பாராளுமன்ற செயலருக்கு பாராளுமன்ற நூலகரால் தகவல் அனுப்பப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினாகளே நூல்களை சட்டரீதியாக எடுத்துச்சென்று பின்னர் அவற்றைத் திருப்பிக் கொடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நூலின் பெறுமதியையும் அதனுடன் சேர்த்து 25 வீத அபராதத்தையும் விதிக்க பாராளுமன்ற செயலர் நூலகருக்கு அனுமதி வழங்கியுள்ளார். இதேவேளை பாராளுமன்ற நூலகத்துக்கு பெருமளவான பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்லாத போதும் இந்தத் தடவையின் வரவு செலவுத் திட்டத்தில் பாராளுமன்ற நூலக பராமரிப்புக்காக நாற்பது இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# எதியோப்பியாவை ஒத்ததாகவே வரவு-செலவுத் திட்டம் அமையும்

*–முன்னாள் பிரதிநிதியமைச்சர் பந்துல குணவர்த்தன*

2005 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில் பற்றாக்குறை 11 வீதத்தால் அதிகரிக்கும் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதிநிதியமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த அவர், நாட்டின் 2005ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் சிம்பாப்வே, ஆப்கானிஸ்தான், மற்றும் எதியோப்பியா போன்ற நாடுகளின் வரவு-செலவுத் திட்டத்தை ஒத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)


# பணிநிலை வேண்டுகை

**பாண்டியன் வாணிபத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளில் வெற்றிடங்கள் உள்ளன.**

**கணக்குப்பதிவாளர், விற்பனையாளர், களஞ்சியக்காப்பாளர்**

**அகவை பொதுவானது:**-18-45 வரை

**கணக்குப்பதிவாளர்:**- ஆண், பெண் இருபாலாரும்

**விற்பனையாளர், களஞ்சியக் காப்பாளர்:**- ஆண்கள் மட்டும்

**தகைமை:-**

**கணக்குப்பதிவாளர்:**- உயர்தரம், வர்த்தகம் பயின்று கணக்கியலில் சித்தியடைந்திருத்தல்

**விற்பனையாளர்:**- ஆண்டு 08 பயின்றிருத்தல்

**களஞ்சியக்காப்பாளர்:**- சாதாரணதரம் தேறியிருத்தல்

மேல் உள்ள பணிநிலையில் பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**நேர்முகத் தேர்வு**

நாள:-15.11.2004 திங்கட்கிழமை

நேரம் :- கணக்குப்பதிவாளர் - காலை 10.00 மணி
:- விற்பனையாளர், களஞ்சியக்காப்பாளர் - மாலை 3.00மணி

இடம :- பாண்டியன் வாணிபம், நடுவப்பணிமனை, றெட்பானா சந்தி, விசுவமடு.
நேர்முகத்தேர்விற்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது.
கல்விச்சான்று, அடையாளஅட்டை, குடும்பப்பதிவு அட்டை கொண்டு வருதல் வேண்டும்.

ஆளுகை,
பாண்டியன் வாணிபம்,
நடுவப்பணிமனை.

(5353)



## 05 ஆம் ஆண்டு நினைவில்



### லெப். ஜனார்த்தனன்

பாலசிங்கம் மயூரன் (பட்டு))
உலவிர்குளம் பிள்ளையார்கோவிலடி,
அச்சுவேலி-யாழ்
(ஓயாதஅலை-03 புளியங்குள சமரின்போது)

ஜனனம்:- 02.02.1980
வீரச்சாவு:- 08.11.1999

விடியலைத்தேடி விரைந்தீர்-அண்ணன் காட்டிய பாதையில் நடந்தீர்
கொடுமையைக்கண்டு கொதித்தீர்-விடுதலை வரமுன் கரைந்தீர்!

லெப். ஜனார்த்தனன் ஆங்கிலக்கல்வி நிலையத்தில் 2005இற்கான சகல வகுப்புகளும் ஆரம்பமாகின்றன. புதிதாக இணைபவர்கள்இணைந்து கொள்ளலாம்.

முகவரி:- கி.பாலசிங்கம்,
1ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

(5258)

## 19 ஆம் ஆண்டு நினைவில்

### மூத்ததளபதி மேஜர் அல்பேட்

கந்தையா ரூபநிதி
(கதுமலை சமரின்போது)


அச்சுவேலி மண்ணில்
24.06.1960
கதுமலை மண்ணில்
21.12.1985

புலிகள் அமைப்பின் முக்கிய தளபதியும், மூத்த உறுப்பினரும் முதலாவது மேஜருமாகிய மேஜர் அல்பேட்



தகவல் :- பா.பாலமுரளி (வவுனியா)

# இந்தியாவை வீழ்த்துவதே லட்சியம் பாகிஸ்தான் வேகப்பந்து வீரர் அக்தர்



இந்திய கிரிக்கெட் வாரியத்தின் 75 ஆவது ஆண்டுவிழா கொண்டாடும் வகையில் நடத்தப்படும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவை வீழ்த்துவதே லட்சியம் என்று பந்து வீச்சாளர் அகதர் கூறியுள்ளார். இந்திய கிரிக்கெட் வாரியத்தின் 75 ஆவது ஆண்டு விழா வரும் 13 ஆம் திகதி கொல்கத்தாவில் கோலாகலமாக கொண்டாடப்படவுள்ளது. இதையொட்டி இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஒன்று நடத்தப்படு கிறது. இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணி இன்னும் சில நாட்களில் இந்தியா வர இருக்கிறது. முன்னதாக • விளம்பரப் படத் தில் நடிப்பதற்காக வேகப்பந்து வீச்சாளர் அக்தர் இந்தியா வந்து விட்டார்.

தோள் பட்டை வலி காரணமாக அக்தர் கடைசியாக இலங்கை அணிக்கு எதிரான இரண் டாவது டெஸ்ட் போட்டியில் ஆடவில்லை. தற்போது முழுக் குணமடைந்து விட்டதை அடுத்து அக்தருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. மும்பையில் அக்தர் நிருபர்களிடம் கூறுகையில், இந்திய வாரியத்தின் 75 ஆவது ஆண்டு விழாப் போட்டியில் வெற்றிபெற துடிப்புடன் காத்திருக்கிறேன். இந்த ஆண்டு தொடக்கத்தில் இந்திய அணி எங்கள் நாட்டில் ஒரு நாள் மற்றும் டெஸ்ட் தொடரை கைப்பற்றியது. அது போல் இந்தியாவில் நடக்கும் போட்டியில் நாங்கள் வெற்றிபெற காத்திருக்கிறோம் என்றார்.

இந்தியாவுடன் மோதல் முடிந்த பின்னர், பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலியாவில் நடக்கும் முத்தரப்புப் போட்டியில் கலந்து கொள்ள இருக்கிறது. மேற்கு இந்தியத் தீவு, அவுஸ்திரேலியா ஆகிய மற்ற அணிகளும் இந்தப் போட்டியில் ஆடவுள்ளன. இந்தப் பந்தயத்தில் அதிக சாதனைகள் நிகழ்த்த வேண்டும் என்று அக்தர் காத்திருக்கிறார். இதற்கு ஒரு முன்னோட்டமாக இந்தியாவுடன் ஆட்டம் நடக்க இருக்கிறது என்று அக்தர் தெரிவித்தார்.

# இரண்டு நாளில் டெஸ்ட் போட்டி முடிகிறது என்றால் மிகப்பெரிய தவறு ஒன்று இருக்கவேண்டும்

**-அலன் போர்டர்**



இரண்டே நாளில் டெஸ்ட் போட்டி முடிகிறது என்றால் அதில் மிகப்பெரிய தவறு ஏதேனும் இருக்க வேண்டும். பலம் குறைந்த அணி உலக சம்பியனுடன் மோதியது என்றால் அந்தப் போட்டி ஒருவேளை இரண்டு நாட்களில் முடியலாம். ஆனால் இந்தியா, அவுஸ்திரேலியா இடையிலான போட்டி இவ்வளவு விரைவாக முடிவதற்கு வாய்ப்பே இல்லை. இதற்கு முழுமையான காரணம் மும்பை ஆடுகளம் தான். இது முழுவதுமாக சுழற் பந்துக்கு ஒத்துழைப்பு அளிப்பதாக இருந்தது என அவுஸ்.அணியின் முன்னாள் தலைவர் அலன்போடர் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் முதல்நாளில் வேகப்பந்து வீச்சுக்கும் நன்றாக ஒத்துழைத்தது. இதனால் இரு அணி துடுப்பாட்டவீரர்களும் ஓட்டம் பெற மிகவும் திணறினர். கடந்த மூன்று போட்டிகளில் பந்துவீசாத கிளார்க்கூட இங்கு 6விக்கெட்டை வீழ்த்தினார். இந்திய அணியில் முரளி கார்த்திக் பந்து வீச்சு அபாரமாக இருந்தது. ஆட்ட நாயகன் விருதுக்கு இவர் முழுத் தகுதியானவர். லட்சுமண், சச்சின் ஜோடி மட்டுமே இந்த போட்டியில் ஓரளவிற்கு ஓட்டங்களைச் சேர்த்தது. கடந்த போட்டிகளில் மோசமாக விளையாடிய இவர்கள் கடினமாக இந்த ஆடுகளத்தில் சிறப்பாக விளையாடினர்.

வெற்றியுடன் தொடரைத்தொடங்கிய அவுஸ்திரேலிய அணி 35 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய மண்ணில் கோப்பையை வென்றாலும், கடைசிப் போட்டியில் தோல்வியடைந்தது பரிதாபம். இனிமேலும் இதுபோல் மற்றவர்கள் குறை கூறாத அளவிற்கு மும்பை மைதானப் பராமரிப்பாளர்கள் ஆடுகளத்தை அமைப்பது நல்லது.

# மும்பை ஆடுகளம் மிகவும் மோசமானது இந்திய அணிக்கு பொண்டிங் எச்சரிக்கை

"மும்பை போன்ற ஆடுகளங்களைத் தயாரிக்கும் வரை இந்திய கிரிக்கெட் அணி சர்வதேச அளவில் முன்னணி அணியாக மாறமுடியாது" என்று கோபப்படுகிறார் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங். மும்பை டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி படுதோல்வியடைந்தது. சூழலுக்குச் சாதகமாகத் தயாரிக்கப்பட்ட இந்த ஆடுகளத்தில் இரண்டு நாட்களுக்கும் சற்றே அதிகம் மட்டுமே போட்டி நீடித்தது. இந்தப்போட்டியில் பங்கேற்பதற்காக அவுஸ்திரேலியாவில் இருந்து பறந்துவந்தவர் ரிக்கிபொண்டிங். போட்டி முடிவு அவரை மிக ஏமாற்றமடையச் செய்துள்ளது. அவுஸ்திரேலிய செய்தி நிறுவனமொன்றிற்கு பேட்டியளித்த பொண்டிங் மும்பைபோட்டியில் தோற்றதற்காக எங்கள் வீரர்கள் ஒருவரைக்கூட நான் குற்றம்சொல்லவே முடியாது. காரணம் அவ்வளவு மோசமான ஒரு ஆடுகளம். எங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது டெஸ்ட் தரத்திற்கு கொஞ்சம் கூட தகுதியில்லாத ஆடுகளம் அது. நான் சொல்ல வேண்டாம். இரண்டே நாட்களில் நாற்பது விக்கெட் விழுந்திருக்கிறது என்பதை வைத்தே யாரும் ஆடுகளத்தின் தன்மையைப் புரிந்து கொள்ள முடியும்.



மும்பை ஆடுகளம் பற்றி நான் முறைப்படி புகார் கொடுக்க முடிவு செய்துள்ளேன். இது சம்பந்தமாக இந்திய அணித்தலைவர் ராகுல்ராவிட்டிடம் பேசத்திட்டமிட்டிருக்கிறேன். காரணம் அவரது கருத்தும் இதேதான்.

இந்திய கிரிக்கெட் அணி சர்வதேச அளவில் முன்னணி அணியாக வளர்ச்சியடைய ஆசைப்படுகின்றது. ஆனால் இந்தியா ஆடுகளப்பராமரிப்பாளர்கள் இப்படி ஆடுகளம் தயாரித்துக் கொண்டிருந்தால் அந்த அணியின் விருப்பம் நிறைவேறாது. நாக்பூர் ஆடுகளம் போலத தயாரித்தால் தான் சர்வதேச அளவில் எந்த நாட்டிற்குச் சென்றாலும் அந்த அணி சாதிக்க முடியும். இதைநான் சொல்வதாக நினைக்க வேண்டாம். நாக்பூர் போட்டி முடிந்ததும் அந்தப்போட்டிக்கான இந்திய அணித் தலைவர் ராகுல்ராவிட் என்ன சொன்னார் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இது அருமையான ஆடுகளம். இளம் இந்திய வீரர்களை இதுபோன்ற ஆடுகளங்களுக்கு அழைத்துவந்து பயிற்சி அளிக்க வேண்டும். அப்போதுதான் உலகின் எந்த ஆடுகளங்களிலும் அவர்கள் சிறப்பாக விளையாட முடியும் என்று ராகுல் தெரிவித்திருந்தார்.

இந்திய கிரிக்கெட் வளர்ச்சிக்கு அப்படிப்பட்ட ஆடுகளங்கள் தான் நல்லது. மும்பையில் தயாரிக்கப்பட்ட ஆடுகளம் சம்பந்தப்பட்ட வீரர்களுக்கு மட்டுமல்ல, போட்டியைக் காணவந்த ரசிகர்களுக்கும் ஏமாற்றம் அளிக்கவே செய்யும். இவ்வாறு தனது பேட்டியில் தெரிவித்துள்ளார் ரிக்கிபொண்டிங்.

# மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டி மகேஸ் பூபதி ஜோடி வெளியேறியது



மாஸ்டர்ஸ் டென்னிஸ் அரையிறுதியில் இந்தியாவின் மகேஷ் பூபதி தோற்று வெளியேறினார். பிரான்ஸ் தலைநகர் பரிசில் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டி நடக்கிறது. முன்னணி வீரர்கள் பங்கேற்கும், இதன் இரட்டையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் மகேஷ் பூபதி,பெலாரசின் மேக்ஸ் மிர்னய் ஜோடி தகுதி பெற்றது. நேற்று முன்தினம் நடந்த அரையிறுதி மோதலில் சிம்பாப்வே நாட்டின் வெய்னே பிளாக், கெவின் உல்யெட் ஜோடி 6-3,6-4 என்ற நேர் செட்களில் மகேஷ் பூபதி, மேக்ஸ் மிர்னய் ஜோடியை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது.

ஆண்கள் ஒற்றையர் அரையிறுதியில் ரஷ்யாவின் சபின்,அர்ஜென்டினாவின் கில்லர்மோ கேனசை எதிர்த்து விளையாடினார். இதில் சபின் 6-2,7-6 என்ற செட்களில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார். மற்றொரு அரையிறுதியில் செக் குடியரசின் ராடிக் ஸ்டிபனிக் 3-6,7-6,6-4 என்ற செட்களில் பெலாரசின் மேக்ஸ் மிர்னயை வீழ்த்தினார்.

# மன்னார் மாவட்ட விளையாட்டு வீரர்களுக்கு காலப்பந்து மெய்வன்மை பயிற்சிப் பட்டறை

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் நிதியுதவியுடன் மன்னார் மாவட்ட செயலகமும், தமிழீழ விளையாட்டுத் துறையினரும் இணைந்து ஒழுங்குசெய்யப்பட்டு 06.11.2004-07.11.2004 வரை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் உதைபந்தாட்டப் பயிற்சியும், மெய்வல்லுனர் பயிற்சியும் மிகவும் சிறப்பாக விளையாட்டு மைதானம் மழைநீர் நிரம்பி இருந்த போதிலும் நடைபெற்றன. உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளராக சிங்கள இனத்தைச் சேர்ந்த என்.கே. அபேசிங்கவும், கே.ஏ. அனுராரட்ணவும் வழங்கினார். மெய்வல்லுனர் பயிற்றுவிப்பாளராக திருமலை மாவட்ட பயிற்றுவிப்பாளர் சண்முகநாதன் விஜயநீதனும் வழங்கினர். இப்பயிற்சி முகாமில் நூறுக்கும் மேற்பட்ட வீரவீராங்கனைகள் கலந்து கொண்டார்கள். இப் பயிற்சியானது 07.11.2004 அன்று பி.ப.4.30 மணியளவில் நிறைவு பெற்றது. பின்பு இரு நாட்களும் கலந்துகொண்ட வீரவீராங்கனைகளுக்கு வடகிழக்கு மாகாண விளையாட்டு உதவி பணிப்பாளர் நிமல்ராஜனும், மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரி ராஜரணசிங்கவும், மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்.சீ.நிலானும் விளையாட்டுத் துறையைச் சேர்ந்த ராஜாவும் பயிற்றுவிப்பாளர் அனைவரும் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தனர்.




இப்பயிற்சி முகாமிற்கு மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து விளையாட்டு உத்தியோகத்தர் பூரண ஒத்துழைப்பு வழங்கினர்.

# மீண்டும் சிறிலங்கா அணியில் முரளி இம்மாத இறுதிக்குள் தீர்மானம்

எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆரம்பமாகும். சிறிலங்கா அணியின் நியூசிலாந்து கிரிக்கெட் சுற்றுப்பயணத்தில் முத்தையா முரளிதரன் பங்கெடுப்பது குறித்து இம்மாத இறுதிக்குள் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நவம்பர் மாத இறுதியில் முரளிதரன் மருத்துவ பரிசோதனைக்காக அவுஸ்திரேலியா செல்லவுள்ளதாக சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திலீப்மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த யூலை மாதத்தில் தென்னாபிரிக்கா அணி சிறிலங்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக முரளி போட்டித்தொடரில் இருந்து விலகிக்கொள்ள நேர்ந்தது. இதனையடுத்து மேலதிக சிகிச்சைக்காக முரளி அவுஸ்திரேலியா சென்றார்.


இதனையடுத்து இம்மாதம் 26ஆம் திகதி மீண்டும் மருத்துவ பரிசோதனைக்காக அவுஸ்திரேலியா செல்லவுள்ளதாக திலீப்மென்டிஸ் தெரிவித்தார்.

# டெஸ்ட் தொடரை இழந்தாலும் மும்பை வெற்றி திருப்தியாகவுள்ளது

**அனில் கும்ளே**



டெஸ்ட்தொடரை இழந்தாலும் கூட மும்பைப் போட்டியில் கிடைத்த வெற்றி எங்களுக்கு திருப்தி அளிக்கிறது. குறிப்பாக மூன்றாம் நாள் பிற்பகலில் கடுமையாக போராடி வெற்றியை எங்கள் வசமாக்கி இருக்கிறோம். 107 ஓட்டங்கள் என்பது பாதுகாப்பற்ற இலக்குத்தான் அது எங்களுக்குத் தெரிந்திருந்தது. ஆனாலும் போராடினோம். ஹர்பஜன், முரளி கார்த்திக் அருமையான ஒத்துழைப்பு அளித்தனர். குறிப்பாக முரளி கார்த்திக் ஆட்டநாயகன் விருதுக்கு அவர் நூற்றுக்கு நூறு சதவீதம் தகுதியானவரே. இக்கட்டான தருணங்களில் எல்லா விக்கெட்டையும் வீழ்த்தி அணிக்குத் திருப்புமுனை ஏற்படுத்தித் தந்தார். அவர்போன்ற திறமையான பந்து வீச்சாளர்களுக்கு அதிக வாய்ப்புக்கள் கிடைக்காமல் இருப்பது வருத்தமான விஷயமே என்றார்.



## சிந்தனைக்கு

விடுதலை வீரனின் சுயநல மற்ற-பற்றற்ற-வாழ்க்கை உன்னதமானது; அர்த்தமானது, சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 09-11-2004

தொலைபேசி 060-2213244

தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## மகிழ்வதற்கு எதுவுமில்லை

எதிர்பார்க்கப்பட்டது போன்று இந்திய-சிறிலங்கா அரசுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் சிறிலங்கா சனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது கைச்சாத்தாகவில்லை. "உரிய நேரத்தில்" கைச்சாத்தாகும் என்ற கூட்டறிக்கையுடன் இவ் உடன்பாடு கைச்சாத்தாவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயம் தொடர்பாக விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் "நிர்வாகம் தொடர்பாக எந்தவொரு ஏற்பாடும் இறுதித் தீர்வு விடயமாக இருக்க வேண்டும" என்பது போன்ற இனப்பிரச்சினை தொடர்பாக முக்கிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் இந்திய சிறிலங்கா பாதுகாப்பு தொடர்பான விடயமே இங்கு நோக்கப்படுகின்றது.

சிறிலங்கா அரசதரப்பு இவ் ஒப்பந்தம் தொடர்பாக தீவிர அக்கறையாக இருந்ததென்பது வெளிப்படையானது. இவ் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவிடமிருந்து இராணுவ ரீதியான ஒத்துழைப்பையும் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் நேரடியான தலையீட்டிற்கு வழிவகைகளைச் செய்யும் நடவடிக்கையாகவும் இதனைத் தொடர்புபடுத்த சிறிலங்கா அரசு விருப்பம் கொண்டுள்ளது.

இதில் சிங்கள ஆட்சியாளர்கள் பெரும் மாறுபாடான கருத்தைக் கொண்டிருக்கவில்லை. குறிப்பாக சனாதிபதி சந்திரிகாவோ அன்றி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவோ அன்று 1987இல் இந்திய-சிறிலங்கா சமாதான உடன்பாடு செய்து கொள்ளப்பட்ட போது இந்தியாவிற்கு எதிராக கூக்குரல் இட்டு தென்னிலங்கையில் பெரும் இரத்தக் களரியை ஏற்படுத்திய ஜே.வி.பியினரே இவ் விடயத்தில் ஒத்த கருத்துடனேயே உள்ளனர்.

இந்தியத் தரப்பிலும் இதற்கு ஆதரவான பலமான சமிக்ஞைகள் இருக்கவே செய்தன. குறிப்பாக இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் ஆலோசகர் மட்டத்திலும், சில முன்னணிப் பத்திரிகையாளர்கள் மத்தியிலும் இது வரவேற்றத்தக்கதொன்றாக இருந்ததாகவே வெளியான தகவல்கள் தெரிவித்தன. ஆனால் இந்திய அரசியற் தரப்பினர் இது குறித்துப் பெரியளவில் வெளிப்படையான அபிப்பிராயத்தை வெளியிடுவது குறைவாகவே இருந்தது.

இதேவேளை இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் சில தினங்களுக்கு முன்னர் ஆற்றிய உரையொன்றில் அரசியல் ரீதியாகவோ, இராஜதந்திர ரீதியாகவோ வெளிநாடுகளில் தலையிடும் நோக்கம் தமக்கு இல்லை எனவும் சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான உதவி மட்டுமே தாம் மேற்கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்க விடயமாக உள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்திற்கும் இது பொருந்தும் எனின் சிறிலங்காவின் பாதுகாப்பு உடன்பாடு பின்தள்ளப்பட்டுள்ளமைக்கு இது காரணமாக இருக்கலாம். ஆனால் இந்திய அதிகாரிகள் மட்டத்திலும், தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்திற்கும் எதிரான வேறு சக்திகள் மட்டத்திலும் பாதுகாப்பு உடன்பாட்டிற்கு ஆதரவாகக் காணப்படும் ஆதரவுக்கு மேம்பட்டதாகவும், பிரதமர் மன்மோகன்சிங் வழமையாக அரசியல்வாதி போன்று பேசாதும் இருப்பின் இது வரவேற்கத்தக்க தொன்றாகவே இருக்கும்.

அவ்வாறு இல்லாது விடில் இப்பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர் இருநாடுகளும் பேசித்தீர்க்க வேண்டிய சில விடயங்கள் இருக்கக்கூடும். குறிப்பாக பலாலி விமானப் படைத்தளம். இந்திய மீனவர் பிரச்சினை போன்றவை இருக்க வாய்ப்புண்டு. இவற்றைத்தவிர இராணுவ அனுகூலங்கள் தொடர்பான விடயங்களும் இருக்க முடியும்.

பலாலி விமானப்படைத்தளம் தொடர்பாக ஏற்கனவே இந்தியாவிற்கும், சிறிலங்காவிற்கும் இடையிலான கருத்தில் ஒருமைப்பாடு ஏற்படவில்லை. சுருக்கமாகக் கூறுவதானால் பலாலி விமானப் படைத்தளத்தை வெளியார், இந்தியாவைத்தவிர வேறு எவரும்பாவிபபதற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்ற இந்தியாவின் நிபந்தனை சிறிலங்காவினால் ஏற்படவில்லை.

பலாலி விமானத்தளத்தை விஸ்தரிப்பதற்கு இந்தியத் தரப்பு கோரிய கேள்விப்பத்திரத்தொகை அதிகம் என்ற கருத்தின் அடிப்படையிலேயே அது நிராகரிக்கப்பட்டது. ஆனால் சிறிலங்கா அவ்வாறு நிராகரித்தமைக்கு இந்தியாவின் நிபந்தனை நிறைவேற்றப்படுமானால் அமெரிக்கா போன்ற வலுவான உதவும் நாடுகன் அதிருப்திக்கு தாம் உள்ளாக வேண்டியதாகிவிடும் என்ற காரணத்தின் அடிப்படையிலேயே ஆகும்.

இந்நிலையில் பாதுகாப்பு உடன்பாடு கைச்சாத்தாகும் முன்னா இவை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள இந்தியா விரும்பியிருத்தல் கூடும். இதேபோன்று கச்சதீவை மீளப் பெற வேண்டும் என்று எழுந்த கோரிக்கை தொடர்பாகவும் இந்திய அரசு பேச்சுக்கள் நடத்தவிரும்பக்கூடும்.

ஆகையினால் இவ் உடன்பாடு தள்ளிப்போடப்பட்டால் நிரந்தரமில்லை என்ற நிலையில் தமிழ் மக்கள் திருப்தி அடைய எதுவுமே இல்லை. ஏனெனில் இவ்உடன்பாடு செய்துகொள்வது பற்றியதான நிலைப்பாட்டிலிருந்து இரு தரப்பினரும் மாறவில்லை. இதனால் தமிழரைப்பொறுத்து சனாதிபதி சந்திரிகா எதிர்பார்த்த விதத்தில் இவ் உடன்பாட்டைச் செய்து கொள்ள முடியவில்லை என்பதைத் தவிர மகிழ்ச்சி அடைவதற்கு வேறு எதுவும் இல்லை.

# வெளிப்படையான மோதல் இன்மை சமாதானம் ஆகிவிடமாட்டாது

### -போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு திருமலைத்தலைவர்

(திருகோணமலை)

"வெளிப்படையாக மோதல் இல்லாதது சமாதானம் அல்ல தாங்கள் ஏற்றுக்கொள்ளாத விடயங்கள் குறித்தும் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தீர்வு காணும் பொழுது தான் சமாதானம் ஆரம்பமாகின்றது."- இவ்வாறு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டத் தலைவா டாக்பின் ஆட்நெஸ், திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்திய 100 மாணவர்கள் பங்கு பற்றிய சமாதானக் கீதங்கள் நிகழ்வில் பங்கு பற்றி பேசும்போது தெரிவித்தார். ஆரம்பத்தில் பிரதம விருந்தினரான டாக்பின் கௌரவ அதிதியான மாகாண அப்போஸ்தல சபைத்தலைவி அருட்சகோதரி எம்.சுனிதா, விசேட அதிதிகளான திருமலை யேசு திருச்சபை சுப்ரீயர் வணபிதா யேகேஸ்வரன், ஹற்றன் நஷனல் வங்கித் திருமலை முகாமையாளர் ஜி.சத்திபவன் றோயல் கண்ஸ்ட்ரக்ஷன், நிறுவன அதிபர் எஸ்.ஜெகதஸன் ஆகியவர்கள் கல்லூரி பாண் இசையுடன் ஊர்வலமாக கல்லூரி அதிபர் அருட்சகோதரி திரேசா ராணி தலைமையில் அழைத்துச் செல்லப்பட்டனர். பிரதம அதிதி டாக்பின் ஆட்நெஸ் பேசும்போது, "இன்றைய மாணவர்கள் பிறப்பதற்கு முன்னரே யுத்தம் இந்த நாட்டில் ஆரம்பமாயிற்று. பாதுகாப்பற்ற தன்மை, விரோதம், வன்செயல், ஆக்கிரமிப்புக்கு மத்தியில் இன்றைய மாணவர்கள் வளர்க்கப்பட்டுள்ளனர்" என்று கூறினார். கடந்த மூன்றாண்டு வன்செயல்கள் மற்றும் மோதல் சம்பவங்கள் இடம் பெறவில்லை. மக்கள் சுதந்திரமாக நடமாடமுடிகின்றது பொது நிகழ்வுகளில் பங்குபற்ற முடிகின்றது. வெளிப்படையான மோதல்கள் இல்லாமை சமாதானம் ஆகாது என்றும் கண்காணிப்புக குழுத்தலைவர் டாக்பின் தெரிவித்தார். சென்மேரிஸ்கல்லூரி அதிபர் அருட்சகோதரி திரோசா ராணி பேசும்போது , நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் ஐக்கியததிற்கு பாடுபடவேண்டும். இதனை போட்டியின் மூலமாகச் செய்யமுடியாது. ஒத்துழைப்பு மூலமேசெய்யமுடியும். என்று குறிப்பிட்டார் அனைத்து மொழிகளிலும் சமாதானத்தை வலியுறுத்தும் கீதங்கள் இசைக் கப்பட்டன. நிகழ்வை ஒட்டி மலர்ஒன்றும் வெளியிடப்பட்டது. (25)

# நிரந்தர நியமனம் கோரிய 10 வங்கி ஊழியர் பணி நீக்கம்

நிரந்தரநியமனம கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தினில் புகார் செய்தவங்கிப் பணியாளர்கள் பத்துப்பேரை சேவையில் இருந்து இடை நிறுத்துமாறு மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய தலைமை பணிப்புரை விடுத்துள்ளது.

கடந்த நான்கு வருடங்களிற்கு மேலாக யாழ்.மாவட்டத்திலுள்ள மக்கள்வங்கிக்கிளைகளில் இவர்கள் பணியாற்றி வருவதாக கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத் தினில் யுத்தகாலப்பகுதியினில் கடமையாற்றியிருந்தவரை பணியினில் இடைநிறுத்த நடவடிக்கை எடுத்துள்ள நிர்வாகம் அதே வேளை அரசியல் செல்வாக்கின் கீழ் சுமார் 53 புதியவர்களை பணிக்கு இணைத்துக் கொண்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந் நிலையில் கடந்த நான்கு வருடங்களிற்கு மேலாக பணியாற்றி வந்திருந்த தற்காலிக பணியாளர்களான இவர்கள், தம்மை உரிய பதவிகளில் நிரந்தர நியமனஞ்செய்ய நடவடிக்கை எடுத்து உதவுமாறு கோரும் மனு வொன்றினை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தினில் சமர்ப்பித்திருந்தனர்.

இம்மனுமீதான விசாரணைக்காக மக்கள்வங்கியின் யாழ். பிராந்தியமுகாமையாளர் அழைக்கப்பட்டிருந்தார்.

இவ் விசாரணையின் ஆரம்ப கட்டங்கள் மட்டுமே இது வரை இடம் பெற்றுள்ள தொடர் நிலையில் மனுவை சமர்ப்பித்த பணியாளர்களை சேவையிலிருந்து இடைநிறுத்துவதற்கான உத்தரவு அவர்கள் பணியாற்றும் வங்கிக் கிளைகளினது முகாமையாளர்களுகட்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் கொழும்பு தலைமையகத்தினால் விடுக்கப்பட்டு சுற்று நிருபம் ஒன்றினை காரணம் காட்டியே யாழ். பிராந்திய தலைமையகத்தால் இவ் இடைநிறுத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ் உத்தரவினையடுத்து குறித்த பணியாளர்களை வங்கிக் கட்டிடங்களினுள் நுழையக்கூடாதென கிளைமுகாமையாளர்கள் அறிவித்துள்ளனர். இதனையடுத்து இவ்விடயம் தொடர்பில் உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு பாதிக்கப்பட்ட பணியாளர்கள் மீண்டும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் புகார்செய்துள்ளனர். (27)

# எஸ்.பி.திசநாயக்க மீது வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருக்கும் தடை நீடிப்பு

தான்வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை நீக்குமாறு முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க விடுத்த வேண்டுகோளை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சமுர்த்திநிதியை பிழையாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணைரயின் போது அவர் சார்பாக ஆஜரான சனாதிபதி சட்டத்தரணி சொக்ஸி இவ்வேண்டுகோளைவிடுத்துள்ளார். திஸநாயக்க வெளிநாடு செல்வதற்கு விதிக்கப்படடுள்ள தடையை நீக்குவதற்குக் குற்றப்புலனாய்வுப் பிரிவு எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக கொழும்பு பிரதம நீதிபதி சரோஜின் குசலவீரவர்த்தன கருத்துத் தெரிவிக்கையில், நீதிமன்ற உத்தரவில் மட்டும் வெளிநாடு செல்வதற்கு அவரிற்குச் சந்தர்ப்பம் வழங்கமுடியுமெனத் தெரிவித்துள்ளார். இம்மாதம் 27 ஆம் திகதிமுதல் டிசெம்பர்மாதம் நான்காம் திகதி வரையான காலப் பகுதியில் திஸாநாயக்க வெளிநாட்டில் தங்கியிருக்க வேண்டியுள்ளமையால் அதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு சனாதிபதி சட்டத்தரணி சொக்ஸி கோரியுள்ளார். 10இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சீரப்பிணைகளின் மூலம் அவரிற்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சமுர்த்தி மோசடி தொடர்பாகத் தொடர்ந்து விசாரணைகள் இடம் பெறுவதாகவும், விசாரணைகள் முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார்களென சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பிகாவரிதாபு என்பவரை எதிர்வரும் 22ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. எதிர்வரும் சனவரி மாதம் 31ஆம்திகதி மீண்டும் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சனாதிபதி சந்திரிகா நேற்று கொழும்பு திரும்பினார்

இந்தியாவிற்கு ஐந்து நாள் உத்தியோகபூர்வமாக விஜயத்தை மேற்கொண்டிருந்த சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா நேற்றுக்காலை நாடுதிரும்பியுள்ளார்.

இலங்கைக்கு வரும் வழியில் ஐக்கிய அரபு எமரேற்சிற்குச் சென்ற அவர் அந்நாட்டின் காலம் சென்ற சனாதிபதி வின்சுல்தானின் குடும்பத்தினரைச் சந்தித்து தனது கவலையைத் தெரிவித்துள்ளதாக சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

# கைதாகி விடுவிக்கப்பட்ட இளைஞனுக்கு விசாரணைக்கு வர நிர்ப்பந்தம்

## - மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முறையீடு

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட தமிழ் இளைஞனொருவனை விசாரணைக்கென பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு தொடர்ந்து நிர்ப்பந்திக்கப்படுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டிருந்த குறித்த இளைஞன் காரைநகர் பகுதியை சொந்த இடமாகக் கொண்டவரெனத் தெரியவருகின்றது. கைது செய்யப்பட்டு சுமார் நான்கு வருடங்களிற்கு மேலாக கழுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் பின்னர் அரசு இவர் மீதான குற்றச் சாட்டினை விலக்கிக் கொண்டதையடுத்து விடுவிக்கப்பட்டிருந்தார்.

எனினும் இவரை கொழும்பில் வைத்து மீண்டும் குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் கைது செய்யமுற்பட்ட போதிலும் அவர் தப்பித்து கொண்டதாகத் தெரிய வருகின்றது.

இந்நிலையில் ஊர் திரும்பி காரைநகரிலுள்ள தனது பெற்றோருடன் குறித்த இளைஞன் வாழ்ந்து வருவதாகவும் எனினும் அங்கும் வருகைதந்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் விசாரணை என்ற பெயரில் தன்னை துன்புறுத்தி வருவதாகவும் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.


இதனால் அச்சம் காரணமாகத் தான் தனது பெற்றோரை விட்டுப் பிரிந்து வாழ்வதாகவும், அத்துடன் தலைமறைவாகியிருக்க வேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள அவ் இளைஞன், இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுத்து உதவுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தை கோரியுள்ளார். (27)


# லெப் . கேணல் தூயவனின் 5ஆம் ஆண்டுநினைவு நிகழ்வு

(அலுவலகசெய்தியாளர்)

முன்னாள் யாழ்.மாவட்ட தமிழீழ நிர்வாகப் பொறுப்பாளர் லெப்.கேணல் தூயவன் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்றுக் காலை 9.00 மணிக்கு தூயவன் அரசறிவியற்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் பொதுச்சுடரினை தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து லெப்.கேணல் தூயவன் அவர்களின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை அவரின் தந்தையார் செல்லத்துரை ஏற்றிவைக்க திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை அவரின்





தாயார் திருமதி. செல்லத்துரை அணிவித்தார். தொடர்ந்து போராளி புலிமறவன் தலைமையில் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றது . நினைவுரையினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் வழங்கினார்.

அரசறிவியற் கல்லூரி மாணவி போராளி பைங்கதிர் தலைமையில் நடைபெற்ற கலைநிகழ்வில் கல்லூரி மாணவிகளினால் உருவாக்கப்பெற்ற கையெழுத்துச் சஞ்சிகை "அனலோசை" வெளியிட்டுவைக்கப்பெற்றது. தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கான முதற் சஞ்சிகையினை போராளி மாலதி வெளியிட்டுவைக்க, தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி பெற்றுக்கொண்டார், தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கான சஞ்சிகையினை போராளி அமுதினி வெளியிட்டு வைக்க, தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் பெற்றுக்கொண்டார். அடுத்து போராளி செவ்வந்தி சஞ்சிகையினை வெளியிட்டுவைக்க அரசறிவியற் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன் பெற்றுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து பேபி ஆசிரியையின் நெறியாள்கையில் போராளிக்கலைஞர்கள் வழங்கிய "புதியதோர் உலகம் செய்வோம்" எனும் நாடகநிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# குளம் அமைக்கும் விவகாரத்தில் ஜே.வி.பி–இ.தொ.கா.முறுகல்

ஜே.வி.பி.க்கும்-இ.தொ. காங்கிரசிற்குமிடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது.

பண்டாரவளை பகுதியில் உள்ள பியேசன் குளப்பகுதியில் அரசு புனரமைப்புக்களை மேற்கொள்ளவுள்ளதால் அங்கு விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாக இ.தொ. காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவருமான சச்சிதானந்தன் தெரிவித்துள்ளனர். இக்குளப்பகுதியில் 53குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றன. இவர்களில் பலர் வீடுகளை அமைத்து வாழ்ந்துவருகின்றனர்.

இந்நிலையில் ஜே.வி.பி.யின் உறுப்பினரும், விவசாயத்துறை அமைச்சருமான அனுரகுமாரதிஸாநாயக்கவும் அங்கு சென்று குறிப்பிட்ட குடும்பங்களை வெளியேற கூறியபோதிலும் அவர்களினால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ள அவர்கள் தமது கோரிக்கையை ஏற்று விவசாயத்துறை அமைச்சர் இந்த இடத்தில் குளம் அமைப்பதைக் கைவிட வேண்டுமெனவும் வேறு ஓர் பிரதேசத்தில் அந்தக் குளத்தை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுள்ளனர். அவ்வாறு செய்யாது விட்டால் பண்டாரவளைப்பகுதியைச் சேர்ந்த அனைத்து தமிழ் தோட்ட தொழிலாளர்களையும் ஒன்றினைத்து ஜே.வி.பி.க்கு எதிராக போராடப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொர்டர்பாக கருத்துத் தெரிவித்த அநுரகுமார திஸாநாயக்க,

இவ்விடமானது ஏற்கனவே சட்டவிரோதமாகக் கைப்பற்றியது. அங்கு குடியேற்றங்கள் இடம்பெற்றிருப்பதால் அதனை கட்டுமானத்திற்காகத் தாம்பொறுப்பேற்கப் போவதாகவும், இதில் மாற்றங்கள் எதுவும் இல்லையென தெரிவித்தார். எந்த அரசியல்தலையீட்டையும் நாம் மதிக்கப்போவதில்லையென தெரிவித்தார். (32)

## சனாதிபதி....

தொடர்பாகவும் தற்போதைய அரசு மேற் கொள்கின்ற நடவடிக்கைகள் நாட்டிற்கு பாதகத்தை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் ஐ.தே.க.முன்வைக்கக் கூடிய பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது தெரியவருகிறது. (32)

## எரிக்...

விமான நிலைத்திற்கு வரவிருந்ததுஎன்றும் பின்னர் இது நள்ளிரவிலேயே வருகைதரும் என்றும் விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (32)

## இந்...

வரையும் இணைத்துக்கொண்டு முழுமையான சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக மன்னார் மாவட்ட மீனவர்கள் எச்சரித்துள்ளார்கள். (32)

## தொழிலுக்கு...

வடக்கு கடற்றொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த இவர் 3 பிள்ளைகளின் தந்தையார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(33)

## மாவீரர்களின்....

20.11.2004 இற்கு முன்னர் தங்களுக்கு அருகில் உள்ள எமது பிரதேச அல்லது கிராம அரசியல் துறை செயலகங்களில் தொடர்பு கொண்டு தங்களின் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

## அன்ரன்...

மூலம் கிளிநொச்சியை இன்று காலை 8.00 மணியளவில் வந்தடையவுள்ளார். அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் அவரின் துணைவியார்திருமதி. அடேல்பாலசிங்கம் அவர்களும் வருகை தருவார். கிளிநொச்சியை வந்தடையும் அரசியல் ஆலோசகர் அவர்கள் முக்கிய சந்திப்புக்களையும் நடத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவ...

தொடர்போ இல்லையெனக் கூறுகிறோம்.

இச்சம்பவம் இலங்கைப் படைத்தரப்பின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளும், சிறிலங்காப் படைத்தரப்பினரும், வவுணதீவு சூனியப்பிரதேசத்தில் சந்திக்கும் வேளைகளில் தமிழீழ விடுதலைப்புலிகளால் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான பல தாக்குதல் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதால் இதன் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் பிடியில் சிக்க வைத்து தண்டனை வழங்கவேண்டுமெனவும், வேண்டுகோள் விடுக்கப்படிருந்தது. இவ்வாறான தாக்குதல்களை இராணுவத்தின் மீது நடத்துவதினால் எமது சமாதான சூழலை பாதிப்புடையவைக்கலாமென இத்தேச விரோதக்கும்பல்கள் கருதுகின்றனர். இதனால் இப்பிரதேசத்தில் போர்ச்சூழலை ஆரம்பித்து போரை மீண்டும் தொடங்குவதற்கு கங்கணம் கட்டி வருவதுபோல் தெரிகிறது.

விடுதலைப்புலிகள் சமாதான ஒப்பந்தத்தைக் கண்ணியமாகப் பேணி கடைப்பிடித்துவருகின்றனர். அத்துடன் இச்சமாதானச்சூழலை பாதிப்படையாவண்ணம் இருப்பதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். இத்தாக்குதல் சம்பவத்தை விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டிப்பதோடு இவற்றை சிறிலங்கா அரசே பொறுப்பேற்க வேண்டும் எனவும், தெரிவித்துக்கொள்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்...

மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது அச்சிறுவனும் அப்பகுதியில் தரித்து நின்ற தனியார் பேருந்தொன்றின் நடத்துனரும் அப்போது காயமடைந்திருந்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக அப்பகுதியினில் கடமையிலீடுபட்டிருந்த இரு இராணுவ சிப்பாய்கள் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையிலும் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் வழக்கு விசாரணையினை யாழ்.மாவட்டத்திற்கு வெளியே உள்ள நீதி மன்று ஒன்றிற்கு மாற்ற ஏதுவாக குற்றஞ் சாட்டப்பட்ட இராணுவத்தினர் தரப்பில் மேன்முறையீட்டு நீதி மன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இம் மனுமீதான விசாரணையின் போதே வழக்கு விசாரணையினை வவுனியா நீதிமன்றிற்கு மாற்றுவதற்கான உத்தரவினை பிறப்பித்துள்ள மேன்முறையீட்டு நீதிமன்று வழக்கு தொடர்பான ஆவணங்களை அங்கு அனுப்பி வைக்கவும் உத்தரவிட்டுள்ளது.

இதனிடையே முதலாம் எதிரியாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இராணுவ சிப்பாய் சார்பில் இணையாக ஆஜராகியிருந்த 51ஆவது படைப்பிரிவின் உயரதிகாரி அவர் தனது பிணையினை விலக்கிக் கொள்வதாக இன்று அறிவித்துள்ளார்.

இதனையடுத்து முதலாம் எதிரியான படைச்சிப்பாயினை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மேலதிக நீதிமன்ற நீதவான் திருமதி. ஸ்ரீநிதி நந்த கோபாலன் விசாரணைகளுக்காக வவுனியா நீதி மன்றில் அவரை ஆஜர் செய்யப்பட்டார். (27)

## வெளிநாட்டு...

இதனைக் கையெழுத்திட்டால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே சில பிரச்சினைகள் வரலாம் என அவர் எண்ணி இதனை தவிர்க்கும் நோக்கிலே இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமல் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிகிறது என்றார். அத்துடன் பலாலிவிமானத்தள சீரமைப்பு பணிகளுக்கு உதவி செய்யுமென இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது என்றாா்.

இந்தியாவிற்கு சிறிலங்காவில் இருந்து தலைவர்கள் வருவது சாதாரண விடயம் ஒருநாட்டினுடைய அடிப்படை வெளிநாட்டுகொள்கை என்பது அந் நாட்டினுடைய ஒரு தேசிய பயனை எதிர்பார்த்து அமையும். வெளிநாட்டிலிருந்து அழுத்தம் கொடுப்பதால் ஒருநாட்டினுடைய வெளிநாட்டுகொள்கை பாரியளவில் மாறாது. இதேவேளை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் விஜயத்தை இந்தியா ஒரு பெரியளவில் நோக்கவில்லை. இது ஒரு சாதாரண விஜயம் என மேலும் தெரிவித்தார்.

இவர் இந்தியா வருவது முதல் முறையல்ல பல முறை வந்திருக்கிறார்கள். ஆனால் சந்திரிகாவை பொறுத்தவரை இதுமுக்கியமான விஜயம் புதிய அரசு பதவியேற்றபின்னர் இவர்கள் முதன்முறையாக வந்துள்ளமை முன்னர் இவர்கள் வந்து சந்தித்த தலைவர்கள் வேறு அதை வைத்து பார்க்கும் போது இது ஒரு முக்கியமான விடயம் சந்திரிகாவைப்பொறுத்தவரையில் என்றல்ல இன்னுமொன்று இந்திய தலைவர்களை மட்டும் பார்ப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டவிஜயம் அல்ல பத்திரிகை மாநாட்டில் கலந்துகொள்ள வந்தால் அதுவும் அவருக்கு முக்கியமான தென்றார்.

## பாடசாலை....

தில் தற்காலிகமாக இயங்கும் என் பதை பாடசாலை அதிபர் அறியத்தருகின்றார்.

இதேபோல் வலயக்கல்விப் பணிமனையும் புதுக்குடியிருப்பு மாகவித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கவுள்ளது. (08)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.